இலவச வெளியீடு யாழ்ப்பாணம்: Free Circulation

2013
தை, மாசி, பங்குனி

# Vettimaniy
# வெற்றிமணி

மணி -63
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
இணை ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் M.A (Dist)
ஓசை 21

Orient Textiles & Jewellery
மாணவர் கல்வி சிறக்க
எமது வாழ்த்துக்கள்
Konigswall16(AmHBF)
44137 Dormund
Germany
Tel: 0231-162377


விளையாட்டு அரங்கில்...


சாதனையாளர் அரங்கில்...



அகிலத்தை ஆழப்போகும்
## ஐந்து பேனாக்கள்!




தேசிய புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் (தமிழ்மொழிமூலம்) 2ம் நிலை மாணவி
**டர்சிக்கா குகநேசன்**



மருத்துவ அரங்கில்...

சாதனை மாணவிகளின்
## மனித நேயம்!



எமது பிஞ்சு கருத்துக்களுக்கு...





U.K.- Canada-France-Singapore-India-Sri-lanka
Ayngaran International
மாணவர்களின் கல்வி சிறக்க என்றும் எங்கள் வாழ்த்துக்கள்
30, High Street, Collierswood, London SW19 2AB,UNITED KINGDOM


மாணவர் மனங்களில் ஒலிக்கட்டும் வெற்றிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
08 MAY 2013
PERIODICALS DIVISION



## வெற்றிமணி



ஸ்தாபகர்
**அமரர் மு. க. சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர் :
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
மகா வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
**கலாநிதி**
**மு. க. சு. சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
*Dr.M.K.S.Sivakumaran B.F.A.*
Germany

இணையாசிரியர்
**திருமதி**
**வலன்ரீனா இளங்கோவன்.**
M.A. (Dist), Dip.in.Edu, Jaffna.

Associate Editor
**Mrs. Valanteena Elangkovan,**
M.A. (Dist), Dip.in.Edu, Jaffna.

கௌரவ ஆலோசகர்
**கலாநிதி மனோன்மணி**
**சண்முகதாஸ்**

தொடர்புகளுக்கு :
**வெற்றிமணி**
தபால்பெட்டி ஒழுங்கை,
பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு
தொ.பே. : 0771141493

T.P. : 0776686462
E-mail : vettimaniy@gmail.com

**மக்கள் தொடர்பு**
**திரு. சு. இளங்கோவன்** M.A. (Dist)
Dpi.in.S.Sc, Dip.in.F.Sc, Dip.in.S.B.M., Spl Trd.
**(யாழ்ப்பாணம்)**

**திருமதி சாந்தகௌரி ரவீநந்தா**
(Spl. Trid)
**(நாவலப்பிட்டி, மலையகம்)**

Dr. **கதிர்துரைசிங்கம்** (R.M.O)
**(கனடா)**

**திரு. சஞ்சீவன் சிவகுமாரன்**
(B.Sc.Eng.)
**(இங்கிலாந்து)**

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச் செல்கிறது.

**அரவிந்தர்**



### இனிய வாசகர்களுக்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

**வெற்றிமணியின் இனிய வாழ்த்துக்கள். அடுத்து வரும் வெற்றிமணி பத்திரிகைக்கு கட்டுரைகள், கவிதைகள், கதைகளை மாணவரிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் வரவேற்கின்றோம். அத்தோடு தேசிய, மாகாண, மாவட்ட மட்டப்போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களது புகைப்படங்கள், விபரங்களையும் அனுப்பி உதவும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

**வெற்றிமணியை உங்களது நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.** **திருமதி. வலன்ரீனா இளங்கோவன்**
இணை ஆசிரியர்,
வெற்றிமணி.

# வாழ்க்கையில் முன்னேற மூன்று சல்லி முட்டிகள்

## நீங்கள் ஒரு தலைவராக விரும்புகின்றீர்களா? நீங்கள் செல்வந்தராக விரும்புகின்றீர்களா?

ஒன்றினை நீங்கள் கையாழும்போது அதனை அப்படியே உள்வாங்குங்கள். எதிராகவோ கெட்டதாகவோ முதலில் எண்ணவேண்டாம். அதனை மேலும் சிறப்பானதாக எண்ணவும்.....

எந்த வழியில் அதனைக் காண் கிறீர்களோ அந்த வழியில் நடத்துங்கள். அதற்கு நீங்கள் கையும் காலும் வைத்து மலைபோல் வயிறும் வைத்து மூக்கும் முளியும் இட்டு அதனைப் பூதம்போல் கற்பனை பண்ணாதீர்கள்.

ஏமாற்றம் என்பது ஒருவரை நோக டிக்கலாம் அல்லது உற்சாகப்படுத்தலாம். இது நீங்கள் ஏமாற்றத்தை எடுக்கும் விதத்தில் உள்ளது.

நல்லது கெட்டது இதனைத் தீர்மா னிப்பது கூட மனநிலைதான். எல்லாவற் றிற்கும் காரணம் எங்கள் மனநிலை. எனவே ஒருவருடைய மனநிலை எவ்வாறு உள்ளது என்பது முக்கியம். உ-ம் ஒரு கெட்டவரை உங்களுக்குத் தெரியுமா என்றால், ஒருவரைச் சொல்வீர்கள், அதுபோல் ஒரு நல்லவரை தெரியுமா என்றதும் அதற்கும் ஒருவரைச் செல் வீர்கள். இங்கு கெட்டவர் என்று சொன்ன வரது மனநிலை நன்றாக உள்ளபோது அவர் நல்லதைச் செய்யலாம்.

அதேபோல் நல்லவர் என்று நீங்கள் எண்ணியவரது மனநிலை நன்றாக இல்லாதபோது அவர் கெட்டதையும் செய்யலாம். எனவே இங்கு கெட்டவரோ, நல்லவரோ, அவ்வப்போது அவர்களுக்கு இருக்கும்மனநிலையே நல்லதையும் கெட்டதையும் தீர்மானிப்பதாக இருக் கின்றது.

உங்கள் மனநிலை நன்றாக இல்லா மல் விரக்தியாகவோ சோர்வாகவோ ஏமாற்றமாகவோ உள்ளபோது, நீங்கள் உடல் ரீதியாக முதலில் அந்த விரக்தி, சோர்வுகளில் இருந்து விடுபடவேண்டும்.

அதற்கு துள்ளி எழுந்து, கைகளை நன்றாகத் தட்டி உற்சாகமாக உங்களை ஆக்கிக் கொள்ளவேண்டும். இந்த இடத்தில் உங்கள் மனநிலைக்கு எதிராக நடித்தாலும் பிழையில்லை. அந்த உற்சாகமான உடல் அசைவுகள் உங்கள் மனதை நிச்சயமாக மாற்றி புத்து ணர்ச்சியை ஏற்படுத்தும்.


இந்த உற்சாகம் உங்களையும், உங்களை நேசிப்பவர்களையும் உற்சா கப்படுத்தும். நீங்கள் தலைமை தாங்க விரும்புகின்றீர்கள் என்றால் முதலில் உற்சாகமாக இருங்கள். அந்த உற்சாகம் உங்கள் இயல்புநிலையில் இருந்து வேறுபட்டதாகவும் இருக்கலாம். ஆனால் அந்த உற்சாகம் உங்கள் மீது உங்க ளுக்கும் உங்கள் மீது பிறருக்கும் நம்பிக்கை ஊட்டவல்லதாக இருக்கும்.

உதாரணமாகப் பார்த்தால் அமெ ரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சாதா ரணமாக தேர்தலுக்கு முன் இருந்ததை விட, தேர்தல் பிரச்சார நேரத்தில் அவர் காட்டிய உற்சாகம் (ஓட்டமும் நடையும் கூட) அவர் மீது மக்களுக்கு நம்பிக் கையை ஏற்படுத்தியது. ஏன் மகாத்மா காந்தியின் மிடுக்கான நடையும், தளர் வில்லாத பேச்சும் கூட அவருக்கு மக்கள் செல்வாக்கை அள்ளிக்குவித்தது எனலாம்.

மூளை உள்ள ஒருவரால் மட்டும் தான் பணம் சம்பாதிக்கலாம் என்று சொல்லமுடியாது. நேரத்தைச் சரிவரப் பயன்படுத்தும் திறனும், துணிச்சலும் உள்ளவரால் கற்றவரை விட விரைவாகப் பணம் சம்பாதிக்க முடியும்.

Succes in life is the resulf of good judgement. Good judgement is usually the result of experience. Experience is usually the result of Bad judgement. - Anthony Robbings

ஒருவரது வாழ்க்கையின் வெற்றி என்பது அவரது நல்ல கணிப்பின் முடிவில் தங்கியுள்ளது. ஒருவரது நல்ல கணிப்பு என்பது அவரது அனுபவத்தில் வருவது. அனுபவம் என்பது ஒருவரது பிழையான கணிப்புகளால் கிடைப்பது. இது உலகின் மிகப்பெரும் செல்வந்தரான அந்தோனி – றொபின்ஸ் அவர்களது கூற்று. எண்ணம் மாறினாலும் உணர்வு மாறும்.



உணர்வு மாறினால் நடவடிக்கைகள், செயற்பாடுகள் மாறும். இதனால் நல்ல முடிவுகள் கிட்டும். எமக்கு சிறுவயதில் பெற்றவர் தரும் முதல் போதனை பணம் பெரிது அல்ல. இதனை பிள்ளைகள் எவ் வாறு உள்வாங்குகின்றார்கள் என்பதனைப பொறுத்தே அவர்கள் வாழ்வு அமைகின்றது. பணம் பெரிது, அதனைச் சேர்ப்பது மிகவும் கடினம். சும்மாயிருந்தால் பணம் வராது. பணத்தின் அருமையை பிள்ளைகளுக்குப் புரியவைக்க வேண்டும்.

சேர்க்கும் பணத்தை எப்படிக் கையாள்வது என்பதனையும் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒரு பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன் சாரண இயக்கத்திற்காக வேலை செய்து, பணம் சேர்க்க வேண்டும். அதற்காக பாடசாலையில் பத்துப் பேரிடம் வேலை செய்து அவர்களிடம் பணம் பெற்றதாக பத்துப் பேரிடமும் உறுதிப்படுத்தி கையொப் பம் பெற்று வரும்படி பணித்தனர். இதன் மூலம் வேலையின் அருமை புரியும், பணம் எப்படி வருகிறது என்பதும் மாணவர்கள் அறிவர் என்பது இத்திட்டத்தின் நோக்கம்.

சிறுவனும் ஒவ்வொரு வீடாகச் சென்று வேலை கேட்டான். வந்திருக்கும் சிறுவன் பெரும் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதனை அறிந்த அவர்கள் அவனுக்கு வேலை செய்யாமலே பணத் தினையும் கொடுத்து, வேலை செய்ததாக அந்தப் பத்திரத்தில் கையொப்பமும் இட்டுக் கொடுத்தனர். சிலர் அவனுக்கு குளிர்பானமும் கொடுத்து வேலை செய்த தாக உறுதிப்படுத்தி படிவத்தில் கையொப் பம் இட்டனர். இப்படி ஒன்பதுபேர் நடந்து கொண்டனர்.

இறுதியாக ஒரு பணக்கார வீட்டுக் குள் சென்று வேலை கேட்டான் அச் சிறுவன். அப் பணக்காரனுககு அச் சிறு வனும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த வன் என்பது நன்கு தெரியும். இருந்தும், தனது பூந்தோட்டத்திற்கு வாளியில் தண்ணீர் எடுத்து வந்து ஊற்றும்படி சொன்னான். சிறுவனும் எடுத்து வந்து ஊற்றினான். பூந்தோட்டம் மிக அழகானது. மிகவும் பரந்து விசால மாக இருந்தது. காலை ஒன்பது மணியில் இருந்து பதினொரு மணியாகியும் தண்ணீர் ஊற்ற முடிய வில்லை. சிறுவன் களைத்து விட்டான்.

இருப்பினும் அந்த வீட்டுப் பணக் காரன் அதனைக் கண்டதாக இல்லை. சற்று இருந்துவிட்டு மீதி பூமரங்களுக்கும் நீர் ஊற்றிவிட்டு வந்து பணத்தைப் பெறும்படி கூறிவிட்டுச் சென்றுவிட்டார். சிறுவன் கைகள் சிவக்கச் சிவக்க வாளியால்நீர் எடுத்து வந்து ஊற்றிவிட்டு, பணத்தினையும் வேலை செய்தமைக்கான உறுதிப்பத்திரத்தையும் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினான்.

மறுநாள் பாடசாலையில் அந்தப் பணத்தினையும் உறுதிப்படுத்தியு பத்தி ரத்தையும் வழங்கினான். அவன் கொடுத்த பணம் சாரணர் இயக்கத்தின் மூலம் வறிய மாணவர்களின் கல்விக்கு வழங்கப்பட்டது என்று பாடசாலை அதிபர் கூறினார். அன்று இரவு முழுவதும் சிந்தித்தான் தனக்கு வேலை தராதவர்களை விட தன்னிடம் கடினமாக வேலை வாங்கியவரே உண்மை யில் எனக்குப் பணத்தினை உணர வைத் தவர். அப்படிக் கடினமாக உழைத்த பணத்தை வறிய மாணவர்களுக்கு வழங்கிய போது ஏற்பட்ட மகிழ்ச்சி தனக்கு கொடையில் உள்ள மகிழ்வைப் புரிய வைத்தது என்று மகிழ்ந்தான். பிற்காலத்தில் அச்சிறுவன் பணக்காரர்கள் மத்தியில் மனிதநேயம் மிக்க சிறந்த மனிதனாகவும் விளங்கினான்.

எனவே உங்கள் பிள்ளைகளுக்கு பணத்தின் பெருமையைச் சொல்லிக் கொடுக்கும் அதே நேரம், பணத்தினை என்ன என்ன செய்யலாம் என்பதனையும் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

அதற்கு மூன்று சல்லி முட்டிகள் கொடுங்கள். மாதம் மாதம் சிறுவர்களுக்கு சிறிது பணம் கொடுங்கள். சல்லி முட்டிக் குள் போடப் பழக்க வேண்டும். ஒரு சல்லி முட்டி அவர்களின் சேமிப்புப் பழக்கத்திற்கு, 2வது சல்லி முட்டியில் காசு சேர்த்து, அவர்கள் விரும்பியதை வாங்கிச் செலவு செய்ய.

3 சல்லிமுட்டி வாழ்க்கையில் கல்வி கற்கமுடியாதவர்களுக்கு, வாழ வழி யில்லாதவர்களுக்கு உதவுவதற்கு.

இந்த மூன்று சல்லிமுட்டியுடன் நீங்களும் செல்வந்தராகுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY
08 MAY 2013
PERIODICALS DIVISION



# அகிலத்தை ஆழப்போகும் ஐந்து பேனாக்கள்









மாதங்கி

முன்னர் பாடசாலைக்குச் செல்வது என்றால் ரயில் பயணம்போல் ஒரு சூட்கேசுடன் புகையிரத நிலையம் செல்வது போல்", புத்தகங்கள் நிறைய சூட்கேசில் எடுத்துச் செல்வோம்.

இப்போ ஒரு லப்ரொப் மற்றது ஒரு ஐபோன் அதிலும் லப்ரொப் சுருங்கி ஐப்பாட் ஆனது. எங்கு போகிறார்கள், எதற்குப் போகிறார்கள் என்று பெரியவர்களால் கண்டுகொள்ளமுடியாது. நன்மையும் நடக்குது தீமையும் நடக்குது. ஆனால் அறிவுத் தேடலுக்கு பஞ்சமில்லை. ஜாதி, மத, மன வேறுபாடு இன்றி கூகுள் மாஸ்ரர் வேறு இப்போ கை கொடுக்கின்றார்.






உலகிலே பெரிதாக இருந்தவை எல்லாம் சுருங்கி உள்ளங் கைக்குள் வந்துவிட்டது. மணிக்கூட்டில் இருந்து தொலைபேசி வரை. அம்மா மம் ஆகிவிட்டது, அப்பா டாட் ஆகிவிட்டது போல் என்றும் சொல்லலாம்.

இப்போ கணினி கூட, கணிசமான அளவு சுருங்கிவிட்டது. இதற்குமேல் சுருக்கமுடியுமா என்று எண்ணுவதே யப்பான் காரனுடைய பிழைப்பாய் போச்சு. அதனால் 2003இல் இருந்து முயல்கிறார்கள். வெற்றியும் கண்டுவிட்டார்கள். ஆனால் இன்னும் சந்தைப்படுத்தவில்லை.

அதுதான் இனி அகிலத்தை ஆழப்போகும் ஐந்து பேனாக்கள்.

ஒரு பேனாவில் இருந்து இருக்கும் இடத்திலேயே மொனிற்றர் (திரை) உருாக்க. ஒரு பேனா எமது கைக்கு முன்னே விரைப்பலகையை உண்டாக்க (Keyboard), ஒரு பேனா கமரா, ஒரு பேனா தொடர்புபடுத்த, ஒரு பேனா தொலைபேசித் தொடர்பு.

The design concept uses five different pens to make a computer. One pen is a CPU, another a camera, one creates a virtual keyboard, another projects the visual output and thus the display and another a communicator (a phone). All five pens can rest in a holding block which recharges the batteries and holds the mass storeage. Each pen communicates wireless, possibly Bluetooth.



இப்படி ஐந்து பேனாக்கள் சேர்ந்து ஒரு கணினியை எந்த இடத்திலும் உருவாக்கிவிடும். இன்னும் ஏன் சந்தைக்கு வரவில்லை என்று கேட்கிறீர்களா? ஒரு வேளை சீனா இந்த ஐந்து பேனாக்களையும் ஒரு பேனாவாக்க முயற்சிப்பதால், யப்பான் யோசிக்கிறதோ தெரியவில்லை. பொறுத்திருப்போம், பாவிக்கத்தானே உலகம் காத்திருக்கிறது.

## பெருமை

(பொருட்பால் – குடிவியல் – அதிகாரம் 98 – பாடல் 1)


**ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை; இளி ஒருவற்கு**
**அஃது இறந்து வாழ்தும் எனல்.**

**– திருக்குறள்**

குறள் பாட்டு

செயலுக்குப் பெருமை தருவது
தன்னால் முடியும் என்பதே
நம்பிக்கை கொ்ணடு செய்வதில்
நல்ல பயன் விளையுமே

என்னால் செய்யமுடியாது
என்ற சோம்பல் தன்மைதான்
இழிவு தேடித் தந்திடும்
இழப்புகளைத் தந்திடும்.



## வெற்றிமணியின் கடி



**ஆசிரியர் :**
நெருப்புக்கோழி முட்டை போடுமா?

**மாணவன் :**
அதுகிட்ட கொப்பியையும் பேனாவையும் கொடுத்துப் பார்த்தாத்தான் சேர் தெரியும்.

கிருபா லேணர்ஸ் Kiruba Learners
அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதி பயிற்சிப் பாடசாலை



குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் (டெக்ரர்) அனுமதிப்புத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெறமுடியும்.
கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
தவணைமுறைக் கட்டணம்.
எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை.





தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 2224353, 021 4923200, 0714546952, 0777225292

சுன்னாகம் 021 2242022 0714546956
கிளிநொச்சி 021 2285505 0714546956
சாவகச்சேரி 021 4923202 0212270700
நெல்லியடி 021 3006550 0214923201
விசுவமடு 021 3201515 0714546956

ஆயிரம் தடவை அளவெடு, ஒரு தடவை வெட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தர்சன் ஆதரவில் மாணவர் அரங்கம்



### மரங்களை நடுவோம் பயன் பெறுவோம்

**அன்புச்செல்வன்**
தரம் 8, யாழ் இந்துக் கல்லூரி.

நவீன காலத்தில் வாழும் எம்மால் மரங்களையும் காடுகளையும் பார்ப்பதே அரிதாக உள்ளது. வரும் காலங்களில் மரங்களே இல்லாது போகும் சந்தர்ப்பம் உண்டு. நாம் அந்நிலை ஏற்படாது தடுக்க வேண்டும்.

தற்போது பலர் வியாபார நோக்கம் கருதி மரங்களை வெட்டுகின்றனர். நகரமயமாதலால் காடுகள் அழிக்கப்பட்டு அவ் இடங்களில் மனிதக் குடியேற்றங்க்ள் உருவாகி வருகின்றன. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் காடுகள் இலங்கையில் 70 வீதமாகக் காணப்பட்டன. ஆனால் இன்று இலங்கையின் மொத்தப் பரப்பளவில் 23 வீதத்திற்கும் குறைவாகவே இயற்கைக் காடுகள் உள்ளன. இன்னும் சில ஆண்டுகளில் காடுகளே இல்லாத நாடாக இலங்கை ஆகிவிடுமோ என எண்ணி மிகவும் கவலை அடைகின்றேன். காடுகளில் உள்ள மரங்களை அழிப்பதால் மழைவீழ்ச்சி குன்றிவிடும். காட்டு விலங்குகளுக்கு வாழிடம் இன்றி அவை இறந்துவிடும். சூழல் வெப்பமடையும். பல எண்ணிப்பார்க்க முடியாத பல பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இவ்வாறான விளைவுகள் ஏற்பட நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. "மீள வளமாக்கல்" மூலம் மீண்டும் காடுகளை உருவாக்க வேண்டும்.

மீள வளமாக்கலுக்காக தேக்கு மரங்களையே அதிகமாக வளர்க்கின்றனர். ஏனென்றால் தேக்கு மரங்கள் மிக விரைவாக வளரக்கூடியவை. மரங்களை அனுமதியின்றி வெட்டுபவர்கள் மீது கடும் தண்டனைகள் வழங்கவேண்டும். முக்கிய தேவைகளுக்காக ஒரு மரத்தை வெட்டினால் இரண்டு மரங்களை நாட்டவேண்டும். நீங்கள் ஒவ்வொரு பிறந்த நாளிலாவது ஒரு மரத்தை நடுங்க்ள். இப்படியான சில நடவடிக்கைகளின் மூலமாக ஆவது மர வளத்தை காப்போம்.

நாம் மரங்களை நாட்டுவதன் மூலம் பல நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மூலிகைச் செடிகள் தற்போது அரிகிவிட்டன. அச்செடிகளை வளர்ப்போமானால் எமக்கு நோய் ஏற்படும்போது மருந்திற்குப் பயன்படுத்தலாம். பல மரங்கள் எமக்கு உண்ண உணவு தருகின்றன. எமது சூழலை அழகுபடுத்துகின்றன. மரங்கள் சிலருக்கு தொழிலையும் வழங்குகின்றன. சிலர் மரக்கன்றுகளை விற்றும் வருமானம் பெற்று வருகின்றனர். இவை தரும் உணவுப் பொருட்களையும் சந்தைப்படுததி சிறிதளவு பணத்தை எமக்கு அளிக்கின்றன. மரங்கள் எமக்கு மட்டும் தான் நிறைய நன்மைகள் செய்கின்றன என்றில்லை. ஏனைய பிராணிகளுக்கும் அவை பயன் கொடுக்கின்றன. காட்டு விலங்குகளுக்கு வசிக்க வாழிடம் கொடுக்கின்றன. அவை உண்ண உணவும் வழங்குகின்றன. இவை மழையை வழங்குவதனால் காலநிலை மாற்றங்களும் ஏற்படாது. மண் அரிப்பையும் தடுக்கும். இவை ஒட்சிசன் வாயுவை வெளிவிடுவதால் சூழல் சமநிலை பேணப்படும்.

இதைவிடவும் மரங்கள் பயன்களைத் தருகின்றன. இப்படி எமக்கும் எல்லா உயிர்களுக்கும் உதவும் மரங்களை நாம் வளர்க்க வேண்டும். நாம் எமது நாட்டில் அனைத்து இடங்களிலும் மரங்களைக் காணக்கூடிய இடமாக மாற்றமுடியும். மரம் நாட்டும் வழக்கத்தை எமது சமூகத்திடமும் மாணவர்களிடமும் பரப்புவதன் மூலம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தமுடியும். அழிந்துவரும் காடுகளையும் பாதுகாத்து எமது நாட்டை தாவர வளம் உள்ள நாடாக மாற்றி அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்களையும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்வோம்.

## My School



The name of my school is CP/GP/ Kathiresan Hindu Ladies College. It is in Nawalapitiya. There are thousand students studying. It has fifty teachers. The principal's name is Mrs. S. Selvaraj. It is a very big school. My class teacher is Mrs. S. Subajini. This school is very beautiful. The name of my Englsh teacher is Mr. Chandrakumar. The school has one to eleven classes.

The school has a music room, Dance rooom, ICT room, Science room, library. The school has many extra curricular activities like drama. speech, dancing and debakes. The school enviches us with lots of sports activities like netball, basketball and chess. I love my shcool.

**S. Jathusha**
*Grade 8,*
*CP/ Kathiresan Hindu Ladies College*

## நூல்களே நிம்மதி



அந்த வீட்டின் ஓரத்திலே அமைதியாக உட்கார்ந்திருந்தது புத்தகம். அது மிகுந்த வேதனையுடன் காணப்பட்டது. தன்னைத் தீண்டுவார் இல்லாமல் தனியே இருந்தே கொண்டே அந்த வீட்டில் நிகழ்பவற்றை கண் கொண்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது. சில மாதங்களுக்கு முன் அவ்வீட்டினரின் செல்லப் பிள்ளையாக இருந்தது புத்தகம். ஆமாம்! ஆழமான கருத்துக்கள் அழகான படங்கள், அருமையான அறிவுத் துளிகள் வீட்டில் அனைவருக்கும் பாவனைக்கேற்ற பயனைத் தந்த அந்தப் புத்தகம் ஏன் இன்று எடுப்பார் இல்லாமல் தவம் கிடக்கின்றது.

ஆமாம் அந்த வீட்டில் இப்போது தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, கணினி போன்றவை குடியேறிவிட்டன. புத்தகத்தில் கவனம் செலுத்தாமல் அவ்வீட்டினர் தொலைபேசியுடனும் தொலைக்காட்சியுடனும் தமது பொழுதைப் போக்கினர். புத்தகமோ மனவேதனையுடன் புழுங்கிக் கொண்டிருந்தனர். அந்த வீட்டினர் மிகுந்த சந்தோசத்தோடு வீட்டிலிருந்தபடியே நேரந்தவறாமல் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகளை ரசித்துக்கொண்டிருந்தனர்.

ஒருநாள் அந்த வீட்டில் மின்சாரம் தடைப்பட்டது. வீட்டினரால் தொலைக்காட்சி, வானொலியுடன் பொழுதைக் கழிக்க முடியவில்லை. மின்சாரம் தடைப்பட்டதால் மிகவும் வேதனைப்பட்டார்கள். எப்போது மின்சாரம் வருமென ஏங்கினார்கள். ஏதோபாரிய திருத்த வேலைகள் காரணமாக மின்சாரம் வர இரண்டு வாரங்களாவது பிடிக்குமென பத்திரிகைகளில் வந்த செய்தி அவர்களைத் தவிக்கச் செய்தது. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த புத்தகத்திற்கு சந்தோசம் தாழவில்லை. நடப்பதை வேடிக்கை பார்த்தது.

அவ்வீட்டினர் இரசனை மிக்க தமக்குள்ளே பேசிக்கொண்டிருந்த விடயம் புத்தகத்தின் காதினுள் தேனாகப் பாய்ந்தது. உந்த மின்சாரத்தை நம்ப இயலாது. அதோட மின்சாரக் கட்டணமும் அதிகம் கட்டவேண்டியிருக்கு. எல்லா நேரமும் இதுகளோட இருக்கவேண்டியிருக்கு. புத்தகம் நாம் விரும்பிய நேரமெல்லாம் படிக்கலாம். மின்சாரம் தேவையில்லை. குப்பி விளக்கிலேனும் படிக்கலாம். புத்தகம் ஒரு அருமையான நண்பன் அல்லவா! "நூலகம் சென்றாலே நிம்மதி". புத்தகம் புன்னகைத்தது.

**ப. அம்பிகை**
*க.பொ.த. உயர்தரம் (கலை)*
*யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.*





ஸ்ரீ. திவ்யதேசன்
தரம் 6D,
யாழ் இந்துக் கல்லூரி.

*visit our new show room...*



**சுந்தர்சன் Suntharsan**

**DISTRIBUTORS OF ELECTRIACL ITEMS AND ELECTRICAL APPLIANCES, WATER PUMPS.**

சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி,
மானிப்பாய்

**மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகிறோம்.**



தொலைபேசி இல. : 021 222 2751
021 4591569
தொலைநகல் : 021 222 2751

உண்மையும் உழைப்பும் சேரும்போது வெற்றிகள் வாசல் கதவைத் தட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜமுகன் ஹாட்வெயர் ஆதரவில்
# சாதனையாளர் அரங்கு

## சர்வதேச ரீதியில் யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சாதனை!



அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இடம் பெற்ற சர்வதேச மட்டத்திலான "அடி டாஷ்" மைதான மற்றும் . சுவட்டு விளையாட்டுப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி மாணவன் இ.செந்தூரன் இலங்கை அணி சார்பாக உயரம் பாய்தலில் 1.95 m உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்று கொடுத்துள்ளார்.

தமிழர் பெருமையை உலகறிய வைத்த சாதனை வீரன் செந்தூரனுக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.

## யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி தேசிய சாதனை!



இலங்கை தேசிய கராத்தே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட கராத்தே போட்டிகளில் பங்குபற்றிய யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவியான உமாசங்கர் ஜயனி 6 வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார். இவர் தேசிய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியிலும் பங்கு பற்றி பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்துள்ளார். சிறுமியானாலும் ஆற்றலோ பெரிது இவரை வெற்றிமணி மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றது.

## வ/ இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலை மாணவியின் சாதனை!



வவுனியா இறம்பைக்குளம் தேசிய பாடசாலை மாணவி செல்வி. டர்சிகா குகநேசன் 2012 தேசிய புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றிய மாணவர்களில் 192 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் முதலாமிடத்தினையும் மாகாண நிலையில் இரண்டாமிடத்தினையும் தேசிய ரீதியில் தமிழ் மொழி மூலம் இரண்டாமிடத்தினையும் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்ந்துள்ளார். இவரை மேலும் பல சாதனைகள் படைத்து எம்மண்ணின் பெருமையை நிலைநாட்ட வெற்றிமணி வாழ்த்துகின்றது.


## யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் பசுபிக் சிறுவர் மாநாட்டுக்காக ஜப்பான் பயணம்



யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவனாகிய செல்வன் பாலேந்திரன் அபிராம் அவர்கள் அகில இலங்கையில் தமிழ்மொழி மூல மாணவர்களில் 193 புள்ளிகளைப் பெற்று முதன்மை மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் அண்மையில் கல்வி அமைச்சில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய இவர் 25ஆவது ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக ஜப்பான் செல்லும் சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளார்.

1989ஆம் ஆண்டு தொடக்கம் புக்கோக்கா நகரில் நடாத்தப்படும் ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் (APCC) இலங்கையும் கலந்து கொள்கின்றது. இம்மாநாடு ஒவ்வொரு ஆண்டிலும் ஜூலை மாதம் 2 வாரங்களளவில் ஜப்பான் புக்கோக்கா நகரில் நடைபெறும். இம்மாநாட்டிற்காக அவ்வமைப்பின் மூலம் தரப்பட்டிருக்கும் நிபந்தனைக்கு ஏற்ப தரம் 5 புலமைப்பரிசில் பரீடசையில் உயர்ந்த தேர்ச்சியைப்பெற்ற மாணவர்களிடையே இருந்து குறித்த எண்ணிக்கையிலான மாணவர்க்ள தெரிவு செய்யப்படுவர். அந்த வகையில் இம்மாநாட்டிற்குச் செல்ல இலங்கையில் இருந்து 6 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவனாகிய செல்வன் அபிராம் அவர்களும் அடங்குகின்றார். ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்து கொள்ளும் அபிராமை வெற்றிமணி பாராட்டி மகிழ்வதுடன், மேலும் பல சாதனைகள் படைத்து எமது மண்ணின் பெருமையை நிலைநாட்ட வாழ்த்துகின்றது.

## தேசிய ரீதியில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவிகள் சாதனை!



கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை கலைக் கழகத்தின் அரச நடன மற்றும் நாட்டியக் குழுவினர் ஒன்றிணைந்து நடாத்திய குழு நடனப் போட்டியில் (பாரதியார் பாடல்) யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவிகள் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். இம்மாணவிகளை ஆசிரியை சி.மைதிலி அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்கள். இவர்களை யாழ் வெற்றிமணி சாதனையாளர் அரங்கு பாராட்டி மகிழ்கின்றது.

## யா/ மகாஜனக் கல்லூரி மாணவியின் சாதனை!



**அகில இலங்கை ரீதியில் 2012ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் யா மகாஜனக் கல்லூரியை சேர்ந்த வா. விதுஷா கவிதையாக்கத்தில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டார். இவரை வெற்றி மணி சாதனையார் அரங்கு பாராட்டி மகிழ்கின்றது.**

## வ/புதுக்குளம் ம.வி மாணவியின் சாதனை!



வவுனியா புதுக்குளம் ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 4 மாணவியான செல்வி ந. கிருஷிகா மாகாண மட்டத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவரை வெற்றிமணி சாதனையார் அரங்கு பாராட்டி மகிழ்கின்றது.

## யா/மகாஜன மகளிர் அணியின் சாதனை



2012ம் ஆண்டு நடைபெற்ற மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 19 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இவ்வணியினரை வெற்றிமணி சாதனையாளர் அரங்கு வாழ்த்தி மகிழ்கின்றது.

T.P. 2833
உ
கற்பக விநாயகர் துணை
KMH
KAJAMUGAN HARDWARE
கஜமுகன் ஹாட்வெயர்
சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்.
Hardware Merchants, Importers of Building Materials, Cement, Paints, Electrical Goods, Cycles, Cycle Parts & Accessories.
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
147, 149, Stanley Road, Jaffna.




உன் இலட்சியத்தை விட அதனை அடையும் வழி முக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகன் திருமண மண்டப ஆதரவில்

# சிறுவர் அரங்கம்

## கண்டுபிடி கண்ணே!



இரண்டு படங்களுக்கும் உள்ள 12 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்.

## படிக்காத பஞ்சன்

பஞ்சன் என்னும் சிறுவனோ
பாடம் படிக்க எண்ணினான்
நெஞ்சில் ஏதோ குழப்பத்தில்
நாளை படிக்க எண்ணினான்

அடுத்த நாளில் படித்திட
எத்தான் புத்தகம் கையிலே
பிடித்த நண்பன் ஒருவனோ
பிடித்தான் போனில் அவனையே!

"மட்டைப் பந்து ஆட்டமே
மாதா கோவில் தெருவிலே
நெட்டை மணியும் ஆடுறார்
நீயும் வாடா போகலாம்"

என்றே அழைக்கப் பஞ்சனும்
எழுந்தே பறந்தான் பார்த்திட
அன்றும் படிப்பு நின்றது
அதுபோல் பலநாள் சென்றது

தேர்வுநாளும் வந்தது
கேள்வித் தாளைத் தந்தனர்
ஆர்வம் பொங்கப் பார்த்தனன்
அவனின் உள்ளம் நொந்தது

பாடம் படிக்கா பஞ்சனோ
பரீட்சை எழுதத் தவித்தனன்
வாடிப் போன மனத்துடன்
வந்தான் தோல்வி முகத்துடன்



## தெரியுமா உங்களுக்கு?

1) நத்தையின் முட்டை என்ன நிறம்? **மஞ்சள்**
2) பறக்கும் முலையூட்டி எது? **வெளவால்**
3) உடல் வியர்க்காத பிராணி எது? **ஒட்டகம்**
4) நீந்திய வண்ணம் தூங்கும் பறவை எது? **வாத்து**
5) முள்ளந்தண்டில்லாத உயிரினங்கள் எவை? **பூச்சிகள், கணவாய், நண்டு, மண்புழு, அட்டைகள**
6) வெளவால்கள் எந்த ஒலியைப் பயன்படுத்துகின்றன? **கழியொலி அலைகள்**
7) நீரிலே தங்கள் வாழ்வை ஆரம்பிக்கும் உயிரினங்கள் எவை? **நுளம்பு, தும்பி, தவளை மற்றும் கடல் உயிரினங்கள்**
8) உரோமங்களைக் கொண்டு உடைகளை உருவாக்கப் பயன்படும் விலங்குகள் எவை? **செம்மறி ஆடு, அல்பகா, ஒட்டகம்**

*ச. கிஷான் குலாஸ்*
தரம் 1,
மன்/ பற்றிமா ம.ம.வி.



யாழ் இந்து ஆரம்ப பாடசாலை தரம் 5 மாணவி செல்வி இ. ஓவியா அவர்கள யாழ் மாவட்ட சிறுவர்களுக்கான அரச சித்திரைப் போட்டியில் வெற்றிபெற்றதுடன், நல்லூர் பிரதேச சபை கோண்டாவில் பொது நூலகத்தால் நடாத்தப்பட்ட பேச்சு, சித்திரப் போட்டிகளில் முதலாமிடத்தையும், சஞ்சிகை ஆக்கப் போட்டியில் இரண்டாமிடத்தினையும் பெற்றுள்ளார். இவரை வெற்றிமணி சிறுவர் அரங்கு பாராட்டுகின்றது.

## தெரியுமா உங்களுக்கு?

### தேள்



மனித இனம் மண்ணில் தோன்றுவதற்கு முன்னால் – அதாவது 270 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மண்ணில் வாழ்ந்து வரும் உயிரினம் தேள்.

கடுங்குளிர் பகுதியானாலும் சரி, கொடுமையான வெப்பமானப் பகுதியானா லும் சரி, தேளால் உயிர் வாழ முடியும்! உணவின்றிப் பல மாதங்களுக்கு பனிப் பகுதியில் வசிக்க தேளால் முடியும். தேள் சாதாரணமாகத் தண்ணீர் குடிப்பதில்லை.

தான் உட்கொள்ளும் உணவிலிருந்தே தனக்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுக் கொள்கிறது. 600 வகையான தேள்கள் உலகில் உள்ளதாக ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது.

### கிளிகள்



அழகான பறவைகளில் கிளியும் ஒன்று. பச்சைக்கிளி, பஞ்சவர்ணக் கிளி என அறிவோம். மொத்தம் கிளிகளில் எத்தனை வகை தெரியுமா? உலகில் 500 வகையான கிளிகள் உள்ளன. நியூகினியா நாட்டில் உள்ள பிற்மி என்ற வகை கிளியே மிகவும் சிறியது. அமேசன் காடுகளில் உள்ள மக்கா கிளிளிகள் மிகப் பெரியவை. ஆண் கிளிக்குமடடும் கழுத்தில் வளைகோடு உண்டு. பச்சைக் கிளிகளில் பெண் கிளிக்கு இக் கோடுகள்கிடையாது.

## வீட்டுத்தோட்டத்தின் பயன்கள்



1) வீடுகளில் சிறிதளவில் தோட்டங்களை வைத்து பராமரித்து வருதல் வீட்டுத் தோட்டம் எனப்படும்.
2) வீட்டுத்தோட்டம் பயனுள்ள ஒரு பொழுதுபோக்கு ஆகும்.
3) வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள், பழ மரங்கள், கிழங்கு வகைகள் போன்றன பயிரிடப்படு கின்றன.
4) சந்தையில் வாங்கும் காய்கறிகளை விட, வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கும் காய்கறிகள் மிகவும் புதியவையாக இருக்கும்.
5) இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால் நஞ்சுத் தன்மை அற்றனவாகவும் இருக்கின்றன.
6) இதனால் இவை சமையல் செய்யும் போது மிகவும் சுவையாக இருக்கின்றன.
7) வீட்டுத் தோட்டத்தில் எமக்குத் தேவையானவற்றைப் பயன்படுத்தி மிகுதியை விற்பனை செய்வதன் மூலம் பண வருவாயைப் பெற்றுக்கொள்ளலாம்.
8) அத்துடன் அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுக்கலாம்.
9) இன்று வீட்டுத் தோட்டத்தில் மல்லிகை, முல்லை, றோசா முதலிய மலர்ச் செடிகளையும் வளர்க்கிறார்கள்.
10) இதனால் நறுமணம் மிக்க மலர்கள் கிடைப்பதோடு வீட்டிற்கும் அழகு ஏற்படுகின்றது.
11) அரசாங்கம் மாணவர்களை வீட்டுத்தோட்டப் பணியில் ஊக்குவிக்க தோட்டப் போட்டிகளை நடத்துகின்றது.
12) இன்று அதிகவான பாடசாலைகளிலும் வீட்டுத் தோட்டங்களைக் காணலாம்.
13) வீடுகளில் சிறிய தோட்டங்கள் இருப்பதால் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது.
14) அத்துடன் சுத்தமான காற்று கிடைப்பதோடு சூழலும் அழகு பெறுகின்றது.
15) எனவே ஒவ்வொரு வீடுகளிலும் வீட்டுத் தோட்டங்களை அமைத்து பயன் பெறுவோமாக.

*உ. பிரணவிகா*
தரம் 1,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.




# திருமுருகன் திருமண மண்டபம்

திருமண மற்றும் மங்கல வைபவங்கள் அனைத்தையும்
சிறப்பாக நடத்துவதற்கு ஓர் சிறந்த மண்டபம்
திருமுருகன் கல்யாண மண்டபம்

திரு.சிவசுப்பிரமணியம்
(செட்டியார்)
தொலைபேசி : 0776660211

கந்தசாமி கோவில் வடக்கு வீதி,
கரந்தன் வீதி, நீர்வேலி, யாழ்ப்பாணம்.


உன்முகம் அழகாக இருக்க கோபத்தை இழந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ரவிநந்தா ஆதரவில்

# மருத்துவ அரங்கு

## சிறுநீரகத்தைக் காக்கும் சுரைக்காய்!

மனிதனின் உடலுக்குத் தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களையும் கொடுப்பதில் காய்கறிகளின் பங்கு அளப்பரியது. காய்கள் அனைத்துமே எளிதில் செமிக்கும் தன்மைகொண்டவை. நம் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் தோட்டப்பயிராக காய்கறிகளைப் பயிர் செய்து பயன்படுத்திவந்தனர். அவற்றில் ஒன்றாக சுரைக்காய் பற்றி தெரிந்துகொள்வோம்.

சுரைக்காய் பல இடங்களில் வீடுகளின் கூரைமேல் படரவிட்டிருப்பார்கள். அதுவெள்ளை நிறப் பூக்களையும், பெரிய குழுவை போன்ற காயையும் கொண்டிருக்கும். சுரைக்காயின் இலை, கொடி, காய், விதை அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை.

**உடல்சூடு நீங்க**

இலங்கை, இந்தியா போன்ற வெப்பமண்டல நாடுகளில் உடல் சூடு இயல்பாகவே அதிகமாகக் காணப்படும். இதனால் உடலானது பலவகையான இன்னல்களைச் சந்திக்க நேரிடும். இதனால்தான் நம் முன்னோர்கள் உடல் சூட்டைத் தணிக்க சுரைக்காயை உணவில் அதிகம் சேர்த்து வந்துள்ளனர். சுரைக்காயை ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்து வந்தால் உடல்சூடு குறையும், வெப்ப நோய்கள் ஏதும் அணுகாது.

**சிறுநீர் பெருக**

மனித உடலில் உள்ள தேவையற்ற நீர்கள் வியர்வை, சிறுநீர் வழியாக வெளியேறும். சிறுநீரகமானது இரத்தத் தில் உள்ள இரசாயனத் தாதுக்களைப் பிரித்து வெளி யேற்றுகிறது. சில சமயங்களில் இவை வெளியேறாமல் மீண்டும் இரத்தத்தால் உறிஞ்சப்பட்டு உடல் பலவகையான இன்னல்களைச் சந்திக்க நேரிடுகிறது. இந்த நிலையைப் போக்கி சிறுநீர் நன்குவெளியேற சுரைக்காய் சிறந்த மருந்து.

**பித்தத்தைக் குறைக்க**

உணவு மாறுபட்டாலும், மன அழுத்தத்தாலும் உடலினை இயக்குகின்ற வாத, பித்த, கபத்தில் பித்தத்தின் நிலை அதிகரிக்கும்போது உடல் பலவீனமடைந்து பல நோய்களின் தாக்குதலுக்கு ஆளாக நேரிடும். இந்த பித்தத்தைக் குறைக்க சுரைக்காய் சிறந்தது. சுரைக்காயை மதிய உணவுடன் சேர்த்து அருந்தி வந்தால் பித்தம் சமநிலைப்படும்.

சுரைக்காய் நரம்புகளுக்கு புத்துணர்வைக் கொடுக்கும், உடலை வலுப்படுத்தும், பெண்களுக்கு உண்டாகும் சோகையைப் போக்கும், இரத்தத்தைச் சுத்தப்படுத்தும், குடல் புண்ணை ஆற்றும், மலச்சிக்கலைப் போக்கும்.


**மூலநாய் உள்ளவர்களுக்கு சுரைக்காய் சிறந்த மருந்து.**

சுரைக்காயின் சதையை சிதைத்து உடலில் தேர்த்து சிறிது நேரம் கழித்து குளித்து வந்தால் உடல் எரிச்சல் குறையும். சுரைக்காயைச் சுட்டு சாம்பலாக்கி தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் கண்நோய் நீங்கும்.

சுரையின் இலைகளை நீரிலிட்டு ஊறவைத்து அந்த நீரைப் பருகி வந்தால் வீக்கம், பெருவயிறு, நீர்க்கட்டு நீங்கும். காமாலை நோய்க்கும் கொடுக்கலாம்.


ஒரு துண்டு சுரைக்காய், விதை நீக்கிய ஒரு நெல்லிக்காய் இவற்றை நீர்விட்டு அரைத்து சாறு பிழிந்து வாரம்ஈருமுறை காலையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் இரத்த அழுத்தம் கட்டுப்படும்.

## புண்கள் வேகமாகக் குணம்பெற



கை, கால்களிலுள்ள புண்கள் உட்பட எல்லாவிதமான புண்களும் விரைந்து குணமாக தினமும் பப்பாளிப்பழம் சாப்பிட்டு வருவது நல்லது. அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்களும் விரைவில் குணமாகப் பப்பாளிப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வரவேண்டும்.

## நெல்லிக்காய்



நெல்லிக்காய் கூந்தல் வளர்ச்சி மற்றும் பராமரிப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதனால்தான் பெரும்பாலான கூந்தல் தைலங்களில் முக்கிய மூலப்பொருளாக நெல்லிக்காயைச் சேர்த்துள்ளனர். கேசத்தின் நிறம் மற்றும் உறுதித் தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. தினமும் நெல்லிக்காய் யூஸ் அருந்தினால் முடி உதிர்தல், உடைந்து போதல் போன்ற பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். கண் நோய்களைத் தடுப்பதிலும் நெல்லிக்காய்க்கு முக்கிய இடமுண்டு. தேன் சேர்த்து நெல்லிக்காய் யூஸ் அருந்துவது பார்வைத் திறனை அதிகரிப்பதோடு கிட்டப் பார்வையைத் தடுக்கும்.

நெல்லிக்காயிலிருக்கும் குரோமியம் இரத்தத்திலுள்ள குளுக்கோசிக் அளவைக் குறைத்து நீரிழிவு நோயை கட்டுக்குள் வைக்க உதவுகிறது. நெல்லிக்காய் இதயத் தசைகளை உறுதியாக்கி உடல் முழுவதும் இரத்த ஓட்டத்தை சீராக்கவும் உதவுகின்றது.

## சாப்பிட்டு முடித்ததும் செய்யக்கூடாத செயல்கள்!!!


வாழ்க்கை முறையில் தான் மாற்றங்கள் என்று நினைத்தால், தற்போது உண்ட பின்பு கூட செய்யும் செயல்களில் வரவர மாற்றங்கள் நிகழ்கின்றன. சிலர் அதிகமாக சாப்பிட்டுவிட்டோம் என்று சாப்பிட்ட பிறகு நடப்பது, சிகரெட் பிடிப்பது என்றெல்லாம் செய்வார்கள். இது மட்டுமன்றி, இதுபோன்று இன்னும் பல செயல்கள் இருக்கின்றன. அவை என்னவென்று படித்து தெரிந்து கொண்டு, அந்தச் செயல்களை இனிமேல் உண்ட பின்பு செய்யாமல், ஆரோக்கியமாக வாழ்வதற்கான வழிகளைப் பின்பற்றி வாழுங்கள்.

**புகைபிடிப்பது**



பெரும்பாலான ஆண்கள் சாப்பிட்டதும், ரிலாக்ஸ் செய்கின்றேன் என்ற பெயரில் சிகரெட் பிடிப்பார்கள். அவ்வாறு சாப்பிட்டு முடித்ததும் ஒரு சிகரெட் பிடித்தால் அது 10 சிகரெட் பிடித்ததற்கு சமம் என்று ஆய்வு ஒன்றில் நிரூபிக்கப் பட்டுள்ளது. மேலும் இந்தச் செயலானது புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும்.

**பழங்களைச் சாப்பிடுவது**



உணவைக் குறைவாகச்சாப்பிட வேண்டும் என்று சாப்பிடுவதற்கு முன் பழங்களைச் சாப்பிடுவோம். ஆனால் உணவு உண்ட பின்பு உடனே பழங்களைச் சாப்பிட்டால், வயிற்றில் காற்றானது நிறைந்து, மிகுந்த உப்புசத்திற்கு ஆளாக்கிவிடும். எனவே பழங்களைச் சாப்பிடவேண்டுமெனில், உண்ட பிறகு 1-2 மணி நேரத்திற்குப் பின்னர் சாப்பிட வேண்டும். அதுவே உணவுக்கு முன் என்றால், 1 மணி நேரத்திற்கு முன் சாப்பிட வேண்டும்.

**தேனீர் குடிப்பது**

சிலர் உணவுக்குப் பின் டீ குடிப்பார்கள். ஆனால் அவ்வாறு குடிப்பது தவறு. ஏனெனில் டீயில் அமிலங்கள் அளவுக்கு அதிகமாக இருக்கும். எனவே அப்போது உணவில் உள்ள புரோட்டீனானது அளவுக்கு அதிகமாகி, பின் செரிமானமடையாமல் வயிற்றில் சிரமத்தை ஏற்படுத்தும்.

**பெல்ட்டை கழற்றி வைப்பது**

உணவு உண்ட பின்பு, வயிறு இறுக்குவது போல் உள்ளது என்று சிலர் பெல்ட்டைக் கழற்றுதல் அல்லது தளர்த்துதல் என்று செய்வார்கள். இவ்வாறு உடனே கழற்றி வைத்தால், குடலானது சில நேரங்களில் திசை திரும்பி, அடைப்பு கூட ஏற்படும்.

**குளிப்பது**



உண்டவுடன் குளிப்பது என்பது ஒரு தவறான பழக்கம். ஏனெனில் இந்தச் செயலால் இத்த ஓட்டமானது சீராக கைகள், கால்கள் மற்றும் இதர உறுப்புகளுக்குச் செல்லுமே தவிர, வயிற்றில் இரத்தமானது இல்லாமல் பலவீனமடைந்து செரிமானத்தின் இயக்கமானது பாதிக்கப்பட்டு, உணவு செரிமானமடையாமல் இருக்கும்.

**நடப்பது**

பொதுவாக மக்கள் உணவை உண்ட பின் சிறிது தூரம் நடந்தால், 99 வயது வரை வாழலாம் என்று நினைக்கின்றனர். உண்மையில் அது தவறான கருத்து. அவ்வாறு நடக்கும் போது ஏற்படும் செரிமானமானது, உணவில் உள்ள ஊட்டச்சத்துக்களை உறிஞ்சாமல் முற்றிலும் வெளியேற்றிவிடும்.

**தூங்குவது**



சாப்பிட்டதும் தூங்கினால், உணவானது சரியாக செரிமானமடையாமல் இருக்கும். மேலும் இந்தச் செயலால், வாயுத் தொல்லை மற்றும் குடலில் ஏதேனும் தொற்றுநோய் வந்து, பின் வயிற்றில் பிரச்சினை ஏற்படும்.




Sri Nantha Photo & Viedo

ஸ்ரீ நந்தா போட்டோ அன் வீடியோ



நாவலப்பிட்டி

Navalapitiya.
T.P. : 0777409650





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ் ஆதரவில் ஆன்மீக அரங்கம்

**அன்பே சிவம்! சிவமே தமிழ்!!**

# அன்பைக் கொடுத்து அன்பைப் பெறு



**அ. செந்தில்குமார்**
*ஆசிரியர்,*
*ஆதம் நகர், இராமநாதபுரம்,*
*தமிழ்நாடு, இந்தியா.*

உலக மக்கள் பேசுகின்ற மூன்றாயிரம் மொழிகளுள் அன்பு என்பதனை உயர்வாக எடுத்து ஓதாத மொழியும் உண்டோ? அன்பினை இப்பூமியில் தனி உண்மையாகப் பதிவு செய்து மகிழும் கவிஞர், அன்பினை உள்ளன்பு, வெளியன்பு என இருவகைப்படுத்தும் கழகத் தொகை அகராதி.

'அன்பே சிவம்' 'அன்பே கடவுள்' என மக்கள் கூறி மகிழ்வர். எந்தவிதமான பதில் உதவியும் எதிர்பாராமல் செய்வதே உயர்ந்த அன்பு. எனவே நாம் பிறரிடம் என்ன எதிர்பார்க்கிறோமோ அதைப் பிறருக்கு நாம் செலுத்தினால் கிடைக்கும் மன மகிழ்ச்சியே அன்பு ஆகும்.

இதையே மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கூறும்பொழுது,

"தனக்கு அன்பின்மை நானும்தானும் அறிவோம் தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார்" என்னும் வரிகளில் கூறுகிறார்.

**அன்பைத் தெரிந்து கொள்ள :**

அன்பு மனதிற்குள் பெய்யும் மழை எனலாம். ஒருவர் மற்றவரிடம் கொண்ட அன்பை எவ்வாறு அறிவது? ஆம் ஒரு பார்வை கூடப் போதும் அன்பைத் தெரிந்து கொள்ளலாம்.

***நோக்கினால் நோக்கி இறைஞ்சிளாள் அஃது அவர்***
***யாப்பினுள் அட்டிய நீர்***

என்னும் குறள் வழியாக திருவள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார். எனவே அன்பெனப்படுவது தான் வேண்டப்பட்ட பொருளின் கண் உள்ள நெகிழ்ச்சி என்கிறார் நக்கீரர்.

அன்பு என்பது பயின்றார் மாட்டுச் செல்லும் காதல் என்கிறார் இளம்பூரண அடிகள். அன்பு வெள்ளத்திற்கு ஒப்பானது பள்ளம் வெள்ளத்தை ஏற்கும். அவ்வாறே ஆழ்ந்த உள்ளமும் அன்பு நிறைந்தற்குரியது. தாம் பழகும் சான்றோரின் ஆழ்ந்த பெருங்குணங்களாலே தான் தமக்கும் ஆழ்ந்த உள்ளம் உண்டாகும்.

"உண்மையான அன்பை வாய்ச்சொல் வெளிப் படுத்தாது. சேவை தான் வெளிப்படுத்தும். அன்பு கருங்கற்களையும் பிளக்கும்"

என்கிறார் மகாத்மா காந்தியடிகள்.

**தோழமை**

அன்பின் பல்வேறு பரிணாமங்கள் பாசம், நாட்டுப்பற்று, பக்தி, காதல், மொழிப்பற்று போன்றவை. ஒலி வடிவிலும், வரி வடிவிலும் மொழியை விரும்பி நுகர்தல், நூல்களை மிக வாங்குதல், பரிசளித்தல், படைப்பாளராக, பேச்சாளராகத் திகழ்தல் மொழிப்பற்றின் வெளிப்பாடுகள்.

அன்பின் முதிர்ச்சியாகிய அருளை அன்னி பெசன்டு அம்மையார், சகோதரி நிவேதா, அன்னை தெரேசா போன்ற எண்ணற்றோரின் தொண்டுகளால் அறியலாம்.

வறுமையிலும் மகிழ்ச்சியுடன் வாழக் கணவன் – மனைவியிடையே அன்பே தேவை. உலகத்தில் தமக்குச் செய்யும் உதவிக்கா அன்பு செலுத்துவோரே பலர். தோழமை கொண்டு வாழவேண்டும். தோழமை அன்பில் வேற்றுமை இல்லை. சாதி, மதம், குலம், காலம், இடம், பொருள் ஆகிய வேற்றுமைகள் காணப்படா. எல்லாம் ஒப்புரிமை, எல்லாம் ஒர தன்மை, ஒப்புரிமையால் பிறந்த அன்பே தோழமை அன்பு.



தோழமை அன்பிருக்கும் இடத்தில் வழக்கில்லை, பிணக்கில்லை, குறும்பில்லை, வகுப்பு வாதமில்லை, வேலை நிறுத்தம் இல்லை அரசியல் குழப்பம் இல்லை எனலாம்.

**வாழ்க்கையை இனிமையாக்குவது :**

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றுமே நமக்குத் தேவையில்லை. அன்புதான் வாழ்க்கை ஆகும்.

எல்லாவிதமான சுயநலமும் மரணம் தான். இந்த உண்மை இம்மை மறுமையாகிய இரண்டு உலகங்களுக்கும் பொருந்தும். நன்மை செய்து கொண்டிருப்பது தான் வாழ்க்கை, மற்றவர்களுக்கு நன்மை செய்யாமலிருப்பது தான் மரணம்.

"அன்பு செலுத்துபவர்களைத் தவிர, வேறு யாரையும் வாழ்வதாகக் கருதமுடியாது" – என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

வாழ்க்கையை இனிதாக ஆக்குவது அன்பு. கஷ்டங்களையெல்லாம் மீளச் செய்வது. அன்பு குடும்ப வாழ்க்கையை மேன்மைப்படுத்துவது அன்பு. உலக வாழ்க்கையை சுவைக்கச் செய்வது அன்பு.

அழகற்றவர்களுக்கு அழகூட்டுவது அன்பு. அன்பு கொழிக்குமிடம் சொர்க்கம். அன்பு மறைந்த இடம் நரகம், எவரிடமும் எப்போதும் அன்போடு இருங்கள் என திருமூலர் வலியுறுத்துகிறார்.

*அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்ற(து) அறம்.*

என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

அழுக்காறு, அவா, வெகுளி, செருக்கு ஆகியவை உள்ள இடத்தில் அமைதி நிலவாது. இவை அமைதியின் பகைகள். இவற்றைத் துரத்திய பின்பே அன்பு உட்புகும் என்கிறார் திருவள்ளுவர்.


மனிதன் பல்லாண்டு பல்லாண்டுகளாக உடலை வளர்த்தான், அறிவை வளர்த்தான், அன்பை வளர்க்கவில்லை. இதனால் உயர்வு, தாழ்வு, வேற்றுமை, பிணக்கு, வழக்கு, இன்னும் உலகில் குடிகொண்டுள்ளன.

உயிரை வளர்ப்பது அன்பு. அன்பு எங்கும் உள்ளது. எல்லாம் வல்லது அன்பு. அன்பே கடவுள் என்றனர் ஆன்றோர்கள். உலகம் உய்யவேண்டுமானால் மக்களிடையே அன்பை வளர்க்கவேண்டும். அதுவே ஏற்றவழி.

எனவே அன்பைச் செழுத்தி அன்பைப் பெற்று அறத்துடன் வாழ்வோமானால் வாழ்வே இனிமை எனலாம்.

*அன்பே சிவம்! அன்பே கடவுள்!*

# சூரிய நமஸ்காரம் செய்யும் முறை!




1. சாதாரண சுவாசம்.
2. மூச்சை உள்ளிளுத்தல்.
3. மூச்சை வெளிவிடல்.
4. மூச்சை வெளிவிடல்.
5. மூச்சை வெளிவிடல்.
6. மூச்சை உள்ளிளுத்து அடக்கல் பின் வெளிவிடல்.
7. மூச்சை உள்ளிளுத்தல்.
8. மூச்சை வெளிவிடல்.
9. மூச்சை உள்ளிளுத்தல்.
10. மூச்சை வெளிவிடல்.
11. மூச்சை உள்ளிளுத்தல்.
12. மூச்சை வெளிவிடல்.

சூரிய சமஸ்காரம் : இது ஏழு ஆசனங்களினால் ஆன ஒரு தொகுதி. இதில் 5 ஆசனங்கள் இரண்டு முறையும், இரண்டு ஆசனங்கள் ஒரு முறையும் செய்தால் சூரிய நமஸ்காரத்தைப் பழகிவிடலாம். இதைச் செய்யும் போது மூச்சுப் பயிற்சியுடன் சூரியனுக்குரிய பெயரையும் நினைத்துக் கொண்டால் மன நிறைவுடன் சூரிய நமஸ்காரம் பூரணப்படுத்தி விடலாம். தொடர்ந்து செய்து வந்தால் சொல்லில் விபரிக்க முடியாது.

பிரணாயாமம் : இதைத் தினமும் தனியாகவும் செய்து கொள்ளலாம். இதை சுகாசனம் (சப்பாணி), பத்மாசனம் போன்றவற்றில் அமர்ந்து செய்யலாம். அப்படி இருக்க முடியாதவர்கள் நாற்காலி, சொகுசு இருக்கை போன்றவற்றில் அமர்ந்தும் செய்யலாம். நாம் சுவாசிக்கும் மூச்சை ஒழுங்குபடுத்துதல். தலையின் பின்பகுதி (பிடரி), முள்ளந்தண்டு, இடுப்பு, ஆகியன நேராக இருந்த நிலையில் சுவாசம் மூக்கினால் நடைபெறுகிறதா என அவதானிக்க வேண்டும். முதலில் உள்வாங்கப்பட்ட மூச்சை உள் இழுத்து பின்னர் இட மூக்கை மூடியவாறு மெதுவாக வலமூக்கால் மூச்சு முழுவதையும் வெளிவிடவும்.

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் ஆன்மீகக் காலாண்டிதழ்
M. K. S. Sivakumaran
Bost Box 2765,
58477 Ludenschied,
Germany.
சிவத்தமிழ்
அறிவியலலோடு ஒட்டிய ஆன்மீகக் கட்டுரைகளை வரவேற்கின்றோம்.
மின்னஞ்சல்: Vettimaniy@hotmail.com.
00492351 458862

உண்மை பேசுபவனிடத்தில் ஆண்டவன் அருகில் நிற்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விளையாட்டு அரங்கு



அமரர் குரும்பசிட்டி செ. லோகதாசன் ஞாபகார்த்த விளையாட்டரங்கம். [முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மகாஜனக் கல்லூரி]

## யாழ் இந்து ஆரம்ப பாடசாலை முதன்மை நிலை 2, 3 இல்ல மெய்வன்மைப் போட்டி – நிகழ்வின் நிழல்கள்








யாழ் இந்து ஆரம்ப படசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி 23-02-2013 சனிக்கிழமை நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. செ.உதயகுமார் அவர்களும், திருமதி நந்தினி உதயகுமார் அவர்களும் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், விருந்தினர் பரிசில் வழங்குவதை 2ஆவது படத்திலும் 3ஆவது படத்தில் சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வினையும் ஏனைய படங்களில் இடைவேளை நிகழ்வுக் காட்சிகளையும் காணலாம்.

## வேம்படியின் அந்தநாள் ஞாபகம்




யா/ வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையின் 1956ம் ஆண்டு நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் அங்கமாக சிறுமிகளுக்கான ஒரு போட்டியாக நடாத்தப்பட்ட தேசிக்காயை கரண்டியில் பிடித்தவாறு ஓடும் போட்டியில் பங்குபற்றிய அன்றைய மாணவிகளை இன்று வெற்றிமணி வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.

## ஒலிம்பிக் செய்திகள்

- கிறீஸ் நாட்டில் ஒலிம்பியா என்ற இடத்தில் ஜீயஸ் என்ற கடவுள் விழாவின்போது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்றது.
- 1896 இல் நவீன ஒலிம்பிக் தொடங்கப்பட்டது. தொடக்கியவர் ஒரு பிரெஞ்சுக்காரர். பெயர் டி.காபார்ட்டிகி.
- உலகப்போர்நடைபெற்ற சமயத்தில் மட்டும் ஒலிம்பிக் நடைபெறவில்லை.
- ஒலிம்பிக் சின்னம் இணைக்கப்பட்ட 5 வளையங்கள் ஐரோப்பா நீங்கலாக மற்ற ஆசிய, ஆபிரிக்க, வட அமெரிக்க, தென் அமெரிக்க, அவுஸ்ரேலியாவைக் குறிக்கின்றது.
- ஐரோப்பாவே ஒலிம்பிக்கின் தாய்க்கண்டம்.
- ஒலிம்பிக் வாசகம் Faster, Highter, Stronger.
- ஒலிம்பிக் அடையாளமாக ஐந்து வளையமும் கறுப்பு, நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு வர்ணங்கள் காணப்படுகின்றன.
- தொடக்க விழாவில் முதலில் வரும் நாடு கிறீஸ், இறுதியில் வருவது ஒலிம்பிக் நடக்கும் நாடு. அகல வரிசைப்படி நாடுகளின் அணிவகுப்பு நடைபெறும்.
- ஒலிம்பிக்கிற்கு தனிக்கொடி உண்டு. தொடக்கத்தில் கொடி ஏற்றப்பட்டதும் நூற்றுக்கணக்கான புறாக்கள் பறக்கவிடப்படும்.
- ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படும். போட்டி முடியும்வரை இது எரிந்து கொண்டிருக்கும்.
- ஒலிம்பிக் தீபம் ஒலிம்பியாவிலிருந்து எடுத்து வரப்படும். அக்காலத்தில் ஒலிவ் இலை கிரீடம்தான் பரிசு.

## சதுரங்கத்தில் வெற்றிச் சரித்திரம் படைக்கும் நம்மவர் சிவாஜி!



16-11-2012 தொடக்கம் 18ஆம் திகதி வரை சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற யூரா சர்வதேச சதுரங்க சுற்றுப் போட்டியில் குரும்பசிட்டியைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் சிவாஜி, பங்குபற்றி சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ளார். 5 சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் 4 புள்ளிகளைப் பெற்று 12வது இடத்தை இவர் அடைந்துள்ளார். பிரான்ஸ் நாட்டின் கிராண்ட் மாஸ்டர் அன்ட்ரய் சொக்கலோவிடம் மாத்திரமே இவர் தோல்வியைத் தழுவியுள்ளார். மொத்தம் 98 போட்டியாளர்கள் இப் போட்டியில் கலந்து கொண்டனர். சிவாஜி அவர்கள் கடந்த 22 வருடங்களாக சுவிற்சர்லாந்தில் சதுரங்கத்தை விளையாடி வருவதுடன், 2007ஆம் ஆண்டில் சுவிற்சர்லாந்தில், சுவிஸ் தமிழர் சதுரங்க ஒன்றியம் என்ற அமைப்பை ஆரம்பித்தவரும் ஆவார்.

## ஒலிம்பிக் – கிரிக்கட்



மிகப் பிரபலமான விளையாட்டு, கிரிக்கெட். இது ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட வில்லை. ஆனால் ஒரேயொரு தடவை 1990 ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட்டது. அதில் வென்ற நாடு இங்கிலாந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆ.சி. நடராஜசா ஞாபகார்த்த பாடசாலை அரங்கம்

# குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகா வித்தியாலய வரலாறு



இன்றைய அதிபர்



ஸ்தாபகர்

ஒரு கிராமத்தின் கல்வி வளர்ச்சிப் போக்கிற்கு அடிப்படைக் காரணியாக அமைவது அக்கிராமத்தில் உள்ள பாடசாலைகளே. இவ்வாறு குரும்பசிட்டி மக்களின் கல்வி வளர்ச்சியில் இரு பாடசாலைகள் முக்கியம் பெறுகின்றன. அவை பொன்னையர் பாடசாலை என அழைக்கப்பட்ட யா/ வயாவிளான் மத்திய மகாவித்தி யாலமும், மகாதேவா வித்தியாலயம் என அழைக்கப்பட்ட பொன். பரமானந்தர் மகாவித்தியாலயமும் ஆகும்.

பொன்.பரமானந்தர் அவர்கள் குரும்பசிட்டி மக்களின் கல்வித் தேவையை உணர்ந்து சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை என்று அழைக்கப்பட்ட இப் பாடசாலையை ஆரம்பித்தார். எந்தவிதமான வருமானமும் இன்றி முதல் இரண்டு வருடங்களும் இப்பாடசாலையை நடாத்தி வந்தார். 1902இல் இப்பாடசாலை அரசாங்க அங்கீகாரம் கிடைக்கப்பெற்று ஆண்டுக்கொருமுறை அரசின் நன்கொடை பெறும் பாடசாலையாக மாறியது. அவ்வாறு கிடைக்கும் பணத்தைக் கொண்டுதான் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கல், தளபாடங்கள் செய்தல், கட்டடத் திருத்தம், வேலிகள் அடைத்தல் முதலான சகல பணிகளையும் வருடம் முழுவதும் செய்யவேண்டியிருந்தது.


பரமானந்தர் அவர்கள் குரும்பசிட்டி மக்களின் கல்வி நிலையினை உயர்ததவேண்டும் என்று அயராது உழைத்தார். இவரே இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். இவர் வீடு வீடாகச் செய்று மாணவர்களை வரவழைத்தும், இரவு பாடசாலையில் தங்கவைத்தும் கல்வியைப் போதித்தார். பாடசாலைக்கு வராத மாணவர்களை வீட்டுக்கு தேடிச் சென்று அழைத்து வந்து கல்வி போதித்தார். அத்தோடு மாணவர்களிடம் எந்தவித ஊதியமும் அறவிடாது மாலைநேர வகுப்புக்களை ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தினார்.

பரமானந்தரது அயராது முயற்சியினால் பாடசாலையின் கல்வித்தரம் உயர்ந்தது. கல்வித் தரம் உயர, வகுப்புகள் அதிகரித்தது. வகுப்புகள் அதிகரிக்க பூநகரி, சாவகச்சேரி, மட்டுமவில், நாவற்குழி, அச்சுவேலி, காங்கேசன்துறை, கட்டுவன், குப்பிழான், வயாவிளான், பலாலி போன்ற இடங்களிலிருந்து பல மாணவர்கள் இப்பாடசாலையில் இணைந்து சைவச் சூழலில் கல்வி கற்கலாயினார்கள். இப்பாடசாலையில் அரிவரி வகுப்பு முதல் ஆசிரிய மாணவர் வகுப்பு வரைக்கும் வகுப்புக்கள் இருந்தன. இப்பாடசாலையில் அட்சரகணிதம், கேத்திர கணிதம், எழுத்து, வாசிப்பு, இலக்கணம், சமயம், நாட்டுச்சீவன சாஸ்திரம், சரித்திரம், பூமி சாஸ்திரம், ஆங்கிலம், சித்திரம், சங்கீதம், சுகாதாரம், தையல், கைப்பணி, உடல்நலக்கல்வி, பொது அறிவு ஆகிய பாடங்கள் இங்கு போதிககப்பட்டது. இப்பாடங்களுடன் கோலாட்டம், ஆடல், நாடகம், புராணங்களுக்கு உரை சொல்லும் முறை என்பனவும் போதிக்கப்பட்டது. பாடசாலையில் இந்து வாலிபர் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு மாதந்தோறும் பூரணை நாளில் சமய அறிஞர்களை வரவழைத்து சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டது. இப்பாடசாலையில் மாணவர் சங்க விழா, பரிசளிப்பு விழா, தமிழ் விழா, நவராத்திரி விழா போன்ற வருடாந்த விழாக்களும் சுகாதார வாரம், விளையாட்டுப்போட்டி, என்பனவும் நடைபெற்றன. இப்பாடசாலை மாணவர்களுக்கு கோலாட்டத்தை ஒரு தனித்துவமான கலையாக பயிற்றுவித்தவர் பரமானந்தர். கயிற்றுக் கோலாட்டம் இப்பாடசாலைக்கே தனித்துவமான ஒரு நிகழ்வாக இருந்தது. மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்தபோது நடைபெற்ற விழாக்களிலும் பிரபல நிகழ்ச்சிகளிலும் பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த விழாக்களிலும் இக்கோலாட்டத்தை பரமானந்தர் அவர்கள் அடிப்பித்து வந்தார்.

மேலும் இப்பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவாக மரவள்ளிக் கிழங்கும் சம்பலும் இலவசமாக பாடசாலை முகாமையாளர்கள் உதவியுடன் வழங்கப்பட்டது.

இப்பாடசாலையில் பிரவேச பண்டிதர் பரீட்சைக்குரிய பாடங்களும் கற்பிக்கப்பட்டதாக வித்துவ சிரோன்மணி பிரம்மஶ்ரீ கணேசையர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதிலிருந்து அக்காலத்தில் இப்பாடசாலையில் பண்டித பரீட்சைக்குரிய வகுப்புக்களும் நடைபெற்று வந்தமையை அறியமுடிகின்றது.

ஆரம்பத்தில் சைவத்தமிழ்க் கலவன் பாடசாலை என வழங்கப்பட்ட இப்பாடசாலையின் பெயர் 1919இல் பரமானந்தரது மகன் மகாதேவன் பிறந்த பின்னர் மகாதேவா வித்தியாசாலை என்று பெயர் மாற்றம் பெற்றது. 1975இல் மகாதேவா வித்தியாசாலை என்ற




பெயர் கைவிடப்பட்டு பொன் பரமானந்தர் வித்தியாலயம் என அழைக்கப்படலாயிற்று. இப்பாடசாலையின் வளர்ச்சி நிலையை அவதானித்த கல்வித்திணைக்களம் 1982இல் வழங்கிய தர உயர்வின் பேறாக பொன். பரமானந்தர் மகா வித்தியாலயம் என்ற இன்றைய பெயரைப் பெற்றது.

குரும்பசிட்டி மண்ணில் பிறந்தவர்கள் அனைவரும் இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள் ஆவார்கள். அத்தோடு பெரும்பாலான குரும்பசிட்டி ஆசிரியர்கள் இப்பாடசாலையிலேயே கல்வியைப் போதித்து வந்தனர். இங்கு சேவையாற்றிய ஆசிரியர்களது அயராத உழைப்பினால் பல உத்தியோகத்தர்கள் இக் கிராமத்தில் தோன்றலாயினர். இதனால் வீட்டுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை குரும்பசிட்டியில் காணப்பட்டுள்ளது.

குரும்பசிட்டி மக்கள் யுத்த சூழ்நிலையால் இடம் பெயர்வதற்கு முன் உள்ள காலப்பகுதி குரும்பசிட்டியில் ஓர் அறிவுப்புரட்சி நடைபெற்ற காலமாகக் கொள்ளப் படுகின்றது. இடப்பெயர்வுக்கு முன்னுள்ள காலத்தில் இப்பாடசாலையில் திரு. பொன். பரமானந்தர் (குரும்பசிட்டி), திரு.சீ. கணபதிப்பிள்ளை (குரும்பசிட்டி), திரு.சீ. வைத்திலிங்கம், திரு.த. கனகபை (மட்டுவில்), திரு.சீ.தம்பிப்பிள்ளை (குரும்பசிட்டி), திரு.மு.க.சுப்பிரமணியம் (குரும்பசிட்டி), திரு.சீ.தாமோரம்பிள்ளை, புன்னாலைக்கட்டுன் திரு.வை.பொன்னையா (பன்னாலை), திரு.சி.கனகசுந்தரம் (குரும்பசிட்டி), திரு.த.சிவராசா (கட்டுவன்) ஆகிய 10 அதிபர்கள் இங்கு கடமையாற்றி உள்ளனர். மேற்கூறிய அதிபர்களில் 6 பேர் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பரமானந்தரது மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1983ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் விளைவாக குரும்பசிட்டி கிராமம் ஒரு பலப்பரீட்சை நடத்தும் ஒரு கேந்திர போர்முனையாக மாறியது. இதனால் 1986இல் இருந்து இக் கிராமத்தைவிட்டு மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் பாடசாலை இராணுவமுகாமாகியது. இவ்விடப் பெயர்வினால் பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயம, பின்பு குப்பிழான் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் இயங்கி வந்தது. இதனால் மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் திரு.மு.தளையசிங்கம் இப்பாடசாலையின் அதிபராக விளங்கினார்.

இதனைத் தொடர்ந்து இந்திய –இலங்கை சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின் 10–8–1987இல் குரும்பசிட்டி மக்கள் ஊர் செல்லும் நிலை ஏற்பட்டது. பொன். பரமானந்தர் மகாவித்தியாலயம் கூரைகள் இல்லாது வெறும் கட்டடமாகக் காட்சி யளித்தது. பாட சாலையை புனரமைப்பதற்கு கல்வித் திணைக்களம் உதவி வழங்கமுடியாத நிலையில் இருந்த வேளை குரும்ப சிட்டி பரஜைகள் குழு பொது மக்களிடையே கடன் பெற்று பாடசாலையைத் திருத்தி 1987 விஜயதசமியன்று மீண்டும் பாடசாலை இயங்க ஆரம்பித்தது. மீண்டும் குரும்ப சிட்டியில பாடசாலை தலை நிமிரத் தொடங்கிய வேளை 1990ஆம் ஆண்டு ஆனி மாதத்தில மீண்டும் போர்ச் சூழலால் குரும்ப சிட்டி மக்கள் முற் றாக இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பொன்பரமானந்தர் மகாவித்தியாலயம், மீண்டும் இடம் பெயர்ந்து மயிலணி ம.வி, மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன் கல்லுரி, யூனியன் கல்லூரி போன்ற பாடசாலைகளின் அரவணைப்பில் இயங்கி வந்தது. இக்காலப் பகுதியில் திரு.க.சிவதாசன் (குரும்பசிட்டி), திரு.S. இராமநாதன் (வீமன்காமம்) ஆகியோர் அதிபர்களாக விளங்கினர். பின்னர் சிறிது காலம் இப்பாடசாலை மூடப்பட்டிருந்தது. பின் மீண்டும் போர் முடிவுக்கு வந்து குரும்பசிட்டிக் கிராமம் மீளெழுச்சி கண்ட நிலையில் 2011ஆம் ஆண்டு விஜயதசமி நன்னாளில் இப்பாடசாலை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு குரும்பசிட்டி மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டு தை மாதம் 12ஆம் திகதி இப்பாடசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியது. இப்பாடசாலையின் அதிபராக திரு.தேவராஜா (குரும்பசிட்டி) நியமிக்கப்பட்டார். 16–01–2012இல் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா சிறப்பாக நடாத்தப்பட்டு இன்று தரம் 5இற்கு உட்பட்ட பாடசாலையாக இயங்கி வருகின்றது. புலம்பெயர் நாட்டில் வாழும் குரும்பசிட்டி மக்கள் மற்றும் சமூக நிறுவனங்கள், பொது அமைப்புக்களின் உதவியுடன் இப்பாடசாலை மீண்டும் எழுச்சி கண்டு வருகின்றது. இப்பாடசாலை மீண்டும் உயர்ச்சிபெற கல்விப் பணியில் அக்கறையுடையோர் உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென்று வேண்டி நிற்கின்றோம்.

உன்னிடம் வம்பளப்பவன் உன்னைப்பற்றியும் வம்பளப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ் ஆசிரியர் மாநாட்டில் வெற்றிமணி இணையாசிரியர் பங்கேற்பு






உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு டிசம்பர் 15, 16ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற்றது. இம் மாநாட்டினை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி ஏற்பாடு செய்திருந்தது.

உலகில் பரந்து விரிந்து வாழும் தமிழ்பேசும் ஆசிரியர் குழாமொன்று இம் மாநாட்டில் சங்கமித்திருந்தது. இலங்கையிலிருந்து வெற்றிமணி இணையாசிரியரும் குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகாவித்தியாலய உபஅதிபரும் ஆகிய திருமதி வலன்ரீனா இளங்கோவன் இம் மாநாட்டில் பங்குபற்ற அழைக்கப்பட்டிருந்தார். இம் மாநாட்டில் கலந்து கொண்ட இவருக்கு "ஊடகங்கள், தமிழ்மொழியை வளர்க்கின்றனவா"? என்ற தொனிப் பொருளில் உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இவ் உரையின்போது வெற்றிமணி பத்திரிகை மாணவர் சமூகத்திற்கு ஆற்றிவரும் தொண்டு பற்றி குறிப்பிட்டிருந்தார். அத்தோடு வெற்றிமணி ஸ்தாபகர் மு.க. சுப்பிரமணியம் அவர்களது தமிழ்ப்பணி பற்றியும் வெற்றிமணியின் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் அவர்களது தமிழ்ப்பணி பற்றியும் எடுத்துக்கூறியதுடன், தன்னை ஊடகத்துறையில் ஈடுபட சிவகுமாரன் அவர்கள் வழிப்படுத்தியமை பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து யாழ் தினக்குரல் பத்திரிகையானது வன்னி இறுதிப்போரிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக கருணைப்பாலம் என்ற அமைப்பை உருவாக்கி சேவையாற்றி வருகின்றது. அதனூடாக வன்னி இறுதிப்போரில் பாதிக்கப்பட்ட பல தமிழ் உறவுகள் பயன்பெற்று வருகின்றமை அவர் எடுத்துரைத்திருந்தார்.

உலகத் தமிழ் ஆசிரியர் மாநாட்டில் கலந்து கொண்டு இவற்றையெல்லாம் செவி சாய்த்த அன்பர்கள் அந்நிகழ்வில் வைத்து தமிழ் உறவுகளுக்கு கருணைப்பாலம் ஊடாக உதவ எண்ணித் தம்முள் ஒரு தொகை நிதியினைத் திரட்டியிருந்தனர். அவ்வாறாக 136140 ரூபா நிதி திரட்டப்பட்டு ஆசிரியர் வலன்ரீனா இளங்கோவனிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அந் நிதியினை அவர் யாழ் தினக்குரல் கருணைப்பாலத்திடம் கையளித்திருந்ததுடன், தமிழ் நாட்டு உறவுகள் எம்மக்களுக்கு உதவுவதற்கு தயாரான நிலையில் உள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

உலகத்தமிழ் ஆசிரியர் மாநாட்டில் அன்பளிக்கப்பட்ட நிதியானது இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைப் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும. இம் மாநாட்டில் இவர் 15ம் திகதி இணையமர்விற்கு தலைமை தாங்கினார். 16ம் திகதி இலங்கை பற்றி அறிக்கை செய்தார். இவரது கட்டுரையை சிறந்த கட்டுரையாக ஏற்று பொது அமர்வில் முதலாவதாக வாசிக்க சந்தர்ப்பம் வழங்கியதுடன் பொன்னாடை போர்த்தும் கௌரவிக்கப்பட்டார்.

# பிறநாட்டு பிரதிநிதிகளின் கைகளில் தவழும் வெற்றிமணி




கனடா நாட்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனுடன் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரின் மனைவி.



முனைவர் மலையமான் (சென்னை)



கலாநிதி க. சிவகுருநாதபிள்ளை மற்றும் பேராசிரியர் 'தமிழ்க்களம்' இ. கோமதிநாயகம் (சென்னை)



தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் முனைவர் இரா. மாதவி



சிங்கப்பூர் கல்வி அமைச்சின் தமிழ்மொழிகள் துறைத் தலைவர் சி.சுப்புலட்சுமி



சிங்கப்பூர் கல்வி அமைச்சின் முதன்மை ஆசிரியர் தமிழரசி சுப்பிரமணியத்துடன் பாடத் திட்ட வரைபு அதிகாரி மு. சிலம்பாயி

கேட்டால் ஒழிய யோசனை கூறாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெற்றிமணி நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை – போட்டி ஆதரவு குரு அரவிந்தன்

## இரண்டாம் பரிசு பெற்றவர் செல்வி. இ. சோபிதா யா/ வேம்படி மகளிர் கல்லூரி – சிறுகதை அரசமரத்தடிப் பிள்ளையார் –

மாலை நான்கு முப்பது மணியைத் தாண்டிவிட்டது என்பது வெயிலின் தன்மையிலும் வயல் வெளியில் நெற்கதிர்களின் சிணுங்கலுடன் வீசும் தென்றலில் இருந்தும் புரிகிறது. பிரமாண்டமாய் வளர்ந்து விரிந்து நிமிர்ந்து நிழல் தரும் அரசமரத்தின் கீழ் ஏங்கிய முகத்துடன் வயல் வெளியை வெறித்துப் பார்த்தபடி இருக்கும் ஏழு வயதே நிரம்பிய அவள் முகத்தில் ஏன்தான் இத்தனை சோகம் கலந்த ஏக்கமோ தெரியவில்லை.

இறுதிநேரக் கோரயுத்தத்தில் அவள் இழந்தது அதிகம்தான். கனகராயன் குளத்தில் தொடங்கிய இழப்பு வவுனியா முகாம் வரை தொடர்ந்தது. தாயின் இழப்பிற்கு முன்னால் செல்லடியில் தனது கால் ஒன்றை இழந்ததைக்கூட அவள் பெரிதுபடுத்தவில்லை. உயிரைக் கையிலே பிடிச்சுக்கொண்டு தந்தை கந்தசாமியோடு வவுனியா முகாமில் கிழந்து இழுபட்டு கடைசியாய் யாழ்ப்பாணத்தில் சண்டிலிப்பாய் வந்ததும், தூரத்து உறவினருக்குச் சொந்தமான வெறும் வளவில் நாலு கிடுகு வைச்சு சின்னதா ஒரு கொட்டில் கட்டி வாழுகின்ற இவளுக்கு இந்த அரசமரம்தான் வளர்ப்புத்தாய்.

பெரும் சத்தத்துடன் வயலுக்கும் அரசமரடித்தடிக்கும் இடையே இருக்கிற தார்வீதியால் தென்னம் பாளை கட்டிய சொகுசு பஸ் ஒன்று சிங்கள பைலாப்பாடல் ஒலிக்க விசில் கைதட்டல் எனக் கடந்து சென்றது. மயூரி இமைக்காமல் அந்த பஸ் சென்ற பாதையைப் பார்த்தபடி இருந்தாள். அந்த பஸ் சற்றுத் தூரத்தில் இருந்த இராணுவ முகாமடியில் சென்று நிற்பதும் அதில் இருந்து இறங்கியவர்களில் சிலர் ஆரவாரத்தோடு இராணுவத்தினரைக் கட்டித் தழுவுவதும் இங்கிருந்தே அவளுக்குத் தெரிந்தது.

A9 பாதை திறந்தாலும் திறந்தாங்கள் இந்தச் சனங்களின்ரை தொல்லை தாங்கமுடியேல்லை..." சினமான குரல் கேட்டுத் திடுக்கிட்டவள் வருவது அவளது நண்பி பறுவதம் என்பதைப் புரிந்து கொண்டாள். நண்பி என்றால் ஒத்த வயதில் இருக்க வேண்டுமா என்ன? நான்கு பிள்ளைகளையும் வெளிநாடு அனுப்பிவிட்டுப் பாவம் இப்போ அனாதைபோல இருக்கிறாள் பறுவதம் பாட்டி. அரைக் கூனலுடன் களைப்போனவள் போல மயூரிக்குப் பக்கத்தில் உள்ள கல்லில் வந்தமர்ந்தாள். அரச மரமும் பாட்டியும் தான் அவளுக்கு ஆறுதலாய் இருப்பதால் பாட்டியைக் கண்டதும் அவளுக்கு உற்சாகம் பொங்கியது.

'என்ன பிள்ளை எங்கட வானரப்படைகள் வரேல்லையே?'

அரசமரத்தடியில் வழமையாக விளையாடும் சிறுவர்களைத்தான் அப்படிப் பாட்டி சொல்கிறார் என்றதும் மயூரிக்குச் சிரிப்பு வந்தது. பாட்டிக்கும் அவர்களுக்கும் அப்படி ஒன்றும் பெரிய வகையில்லை. மயூரியை நொண்டி என்று கேலி செய்வதும், அவளை அவர்களுடன் விளையாட்டிற்குச் சேர்ப்பதில்லை என்பதும்தான் பாட்டியைப் பெரிதும் பாதித்தன. அதுவே பாட்டிக்குப் பெரிய குறையாக இருந்தது.

'பாட்டி சும்மா இருங்கோ, அவங்களை ஒரு குறையும் சொல்லவேண்டாம், எனக்குக் கால் போனதுக்கு அவை என்ன செய்வினம், பாவங்கள்' என்றாள். எண்டைக்காவது ஒருநாள் தன்னைப் புரிந்து கொள்வார்கள், தன்னையும் சேர்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தாலும், ராஜன்தான் தன்னை ஏனோ எதிரியைப் பார்ப்பதுபோலப் பார்க்கிறான் என்று நினைத்துக் கொண்டாள். பாட்டியோ பழங்கதை புதுக்கதை என்று ஓயாமல் ஏதாவது கதைத்துக் கொண்டிருக்க மயூரி அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். சிறுவர் கூட்டம் தூரத்தில் வருவது அவர்களின் கூச்சல் சத்தத்தில் புரிந்தது.

'இவர்களை எப்படியாவது இண்டைக்கு என்னோட பேசவை கடவுளே' என்று வேண்டிக் கொண்டாள். ராஜனோ மயூரியின் பக்கம் திரும்பாமல் தலையைத் திரும்பிக் கொண்டு செல்ல, மற்றவர்கள் கேலி செய்தபடி சென்றார்கள்.

'உங்கைபாரு குரங்குக் கூட்டங்கள் வந்திட்டாங்கள். வா பிள்ளை வீட்டை போவம்'. பாட்டி எழ முயற்சி செய்தபடி மயூரியை அழைத்தாள்.

'இல்லைப்பாட்டி இருப்பம்' மனமில்லாதவளாய் சொன்னாள் மயூரி.

'ஏன் பாட்டி எனக்குக் கால் இருந்தால் என்னையும் விளையாட அழைத்திருப்பினம்தானே?'

பாட்டியின் மௌனம் அவளைத் திரும்பவும் பேசவைத்தது.

'பாட்டி எனக்குக் கால் திரும்ப வராதா?' அவள் ஏக்கத்தோடு கேட்டபோது, கண்களில் கண்ணீர் அரும்பியது.

'பக்தியோட பிள்ளையாரிட்ட கேள் பிள்ளை, கட்டாயம் தருவார்' என்ன சொல்வது என்று புரியாத பாட்டி அவளது தலையை மெதுவாக வருடிவிட்டாள்.

'ஓடி வாங்கோ ஐயோ ஓடி வாங்கோ' அவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும் போது சிறுவர்களிடம் இருந்து அவலக்குரல் கேட்டது. மயூரி பக்கத்தில் கிடந்த தனது ஊன்றுகோலை எடுத்து அக்குளில் வைத்துக் கொண்டு அவர்களை நோக்கி நொண்டிக் கொண்டு ஓட, பறுவதம் பாட்டியும் பின் தொடர்ந்தாள்.

அங்கே மண் அகழ்வதற்காக வெட்டிய சிறிய குழியில் ராஜன் விழுந்து கிடந்தான். காலில் பலமான அடிபட்டதால் அவனால் மேலே ஏறமுடியவில்லை. பிடித்து ஏறுவதற்கோ அல்லது அவனுக்கு உதவி செய்யப் பெரியவர்களோ இருக்கவில்லை. உடனே மயூரி குழியின் விளிம்பில் அமரர்ந்து தன் ஊன்றுகோலின் கைப்பக்கத்தை உள்ளே விட்டு கால் பக்கத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு ராஜன் பிடிடா நான் தூக்கிவிடுறேன் எனத் தைரியமாகச் சொல்லப் பக்கத்தில் நின்ற சிறுவர்களும் சேர்ந்து ஊன்றுகோலைப் பிடித்துக் கொண்டனர். ராஜன் ஊன்றுகோலைப் பலமாகப் பிடித்துக கொள்ள எல்லோரும் சேர்ந்து அவனை மேலே தூக்கிவிட்டனர். மேலே வந்த ராஜனால் நடக்க முடிய வில்லை. உடனே மயூரி தனது ஊன்றுகோலை அவனது அக்குறுக்குள் திணித்து மெதுவாகத் தானும் கெந்திக் கொண்டு அவனோடு சேர்ந்து நடந்தாள். மற்றவர்கள் வீதிக்கு ஓடிச் சென்று அந்த வழியால் வந்த வாகனம் ஒன்றை மறிந்து அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர்.

மணி 5.00ஐத் தாண்டிவிட்டது. இதுவரை வழமையாக விளையாட வரும் ஒருவரையும் காணவில்லை. ராஜனுக்கு என்ன ஆனதோ அதுவும் தெரியாது. இந்தப் பாட்டி எங்கே போனாவோ தவித்து கொண்டிருந்தாள் மயூரி.

'மயூரி...!' ஒரு குரல் பின்னால் இருந்து கேட்கவே திரும்பிய அவளால் ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. காலில் வெள்ளைநிற கட்டுடன் நின்றான் ராஜன்.

'மன்னிச்சிடு மயூரி உன்னை நான் நிறைய நோகடிச்சிட்டன், மன்னிச்சிடு' என்ற ராஜனின் குரலில் மனசார அவன் சொன்னது புரிந்தது.

'சரி சரி அதைவிடு, இனிமேல் நாங்க நண்பர்கள் சரியா' என்றவள் வெகுளிபோலச் சிரித்தாள்.

'போடி' என்று செல்லமாக அடித்துவிட்டு ஓட முயன்றவன், 'அ...ம்...மா' என்று வலியால் கத்தினான்.

இதையெல்லாம் அவதானித்தபடியே அருகே வந்த பறுவதம் பாட்டி சிரித்தபடியே, என்ன பிள்ளை மயூரி இப்பதான் உன்னோட அருமை புரிஞ்சதாமோ இவனுக்கு' என்றாள்.

'எங்களை மன்னிச்சிடுங்குோ பாட்டி, எங்கட மயூரியின்ரகால் சரிவராதா பாட்டி' என்று ஏனைய சிறுவர்கள் ஆவலோடு கேட்டனர்.

'ஏன் சரிவராது எல்லாரும் பிள்ளையாரிட்ட பக்தியோட வேண்டுகோள் விடுத்தாள் சரிவந்திடும்' என்றாள் பறுவதம் பாட்டி.

'எங்கட ஊரிலைதான் பிள்ளையார் கோயில் இல்லையே! என்றான் ராஜன்.

'பாட்டி நீங்கதான் அடிக்கடி சொல்லுவீங்களெ இந்த அரசமரடித்தடியில் பிள்ளையார் இருந்தவர் என்று உங்கட அம்மா சொன்னவா எண்டு'

'ஓம், ஓம் பிள்ளை, ஒவ்வொரு முறையும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எண்டு அந்நியர்கள் படையெடுத்து வரும்போது எங்கடை கோயில்களைத்தான் முதல்ல உடைச் செறியிறவங்களாம். அதுதான் அந்தக் காலத்தில பிள்ளையாரைக் கொண்டு போய் கிணத்துக்குள்ளே ஒளிச்சு வைக்கிறவையாம்'.

'அப்ப அக்கம் பக்கத்து வீட்டுக் கிணறுகளுக்கை எங்கையாவது இப்பவும் பிள்ளையார் ஒளிச்சிருப் பாரோ தெரியாது'

'இப்ப என்ன செய்வம் பாட்டி'?

'ஒரு கல்லை வைச்சுக் கும்பிடுவமே'

'இல்ல பாட்டி, எங்கட வீட்டில ஒரு சின்னப் பிள்ளையார் சிலை இருக்கு, வீட்டில கேட்டிட்டு கொண்டு வந்து தரட்டே'

'நொண்டி நொண்டி திரியிற உனக்கு என்னத்தக்கு இந்த வேலை எல்லாம். பேசாமல் வீட்டில கிட. உன்ரை அம்மாவை அவங்கள் கொன்றபோது, உன்ரை கால் துண்டாய் போனதுபோது எங்கை போயிட்டார் இந்தப் பிள்ளையார்? இப்ப என்னத்திற்கு இதைத் தூக்கிக் கொண்டு போறாய்...? கந்தசாமியின் குரல் ஆவேசமாய் வெளிப்பட்டது.

நிலைமையைப் புரிந்துகொண்ட, வெளியே நின்ற பறுவதம் பாட்டிதான் உதவிக்குப் போனாள்.

'என்ன தம்பி கதைக்கிறியள். அந்தப் பிஞ்சுக்கு உங்களை விட்டால் யார் துணை. அவள் அரசமரத்தடியில் பிள்ளையாரை வைச்சுக் கும்பிடப் போறன் எண்டு சொன்னதில என்ன தப்பிருக்கு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ, இத்தனை பேரின்ர உயிரை அவங்கள் மிருகத்தனமாய் பறிச்சபோது இவளைக் காப்பாத்தினதும் இந்தப் பிள்ளையார்தானே, ஏதோ அடுத்த சந்ததியாவது மிஞ்சியிருக்க வேண்டும் என்ற இரக்கத்திலதானே இவையையாவது மிஞ்சியிருக்க விட்டிருக்கிறார்'. பாட்டியின் வார்த்தைகள் அவளது தகப்பனை சிந்திக்க வைத்தன.

மறுநாள் அரசமரத்தின் கீழ் முன்பு பிள்ளையார் இருந்த கருங்கல்லின் மேல் புதிய பிள்ளையாரை வைத்து விளக்கேற்றித் தீபம் காட்டி எல்லோரும் வழிபட்டார்கள். சின்னப் பிள்ளையார் எண்டாலும் ஊருக்கே வழிகாட்ட ஒரு வெளிச்சம் வந்தது போல எல்லோரும் உணர்ந்தார்கள்.

மறுநாள் இவர்கள் அந்த இடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்தபோது ரீசேட்டும் டெனிம் காற்சட்டையும் அணிந்த வாட்டசாட்டமான ஒருவன் வந்தான். அவனது பார்வை அரசமரத்தடிப் பிள்ளையார் மேலிருந்தது. பிள்ளையாரை நோக்கி அவன் கோபத்தோடு செல்வதைக் கண்ட மயூரி அவசரமாக அவனைத் தடுக்க முயன்றாள். அவனோ அவளைத் தள்ளி விழுத்திவிட்டு ஆவேசத்தோடு பிள்ளையாரைத் தூக்கி வேகமாகத் தரையில் வீசி எறிந்தான்.

'பாவி உன்ரை கை விளங்காதடா' என்ற பாட்டியின் திட்டுதலையும் பொருட்படுத்தாது, 'என்னைக் கேட்காமல் யார் இடத்தில யார் சிலை வைக்கிறது?' என்று கண்டபடி அவர்களைத் திட்டினான்.

'யார் பாட்டி இவன்?' மயூரி தள்ளாடி எழுந்து பிள்ளையார் சிலையைக் கையில் எடுத்தபடி கேட்டாள்.

'இவன்தான் இந்தக் காணியின் சொந்தக் காரனாம். எப்படி இவனுக்கு இந்தக் காணி சொந்தமானது எண்டுதான் தெரியேல்லை. ஒரே பணப்புழக்கமாயிருக்கு, எங்கையிருந்து காசு கிடைச்சுதோ தெரியாது. இவன் ஒருக்காலும் ஊரோட ஒத்துப் போகமாட்டான். பிரச்சினைப் படுத்தவெண்டே இப்பிடி ஒவ்வொரு ஊரிலையும் ஒண்டுரண்டு இருக்குதுகள்' என்றாள் பறுவதம் பாட்டி.

'எங்களை மன்னிச்சிடுங்கோ, உங்களைக் கேட்காமல் செய்தது எங்கட தப்புத்தான். உங்களுக்குப் பிடிக்காட்டி நாங்க போயிடுறோம்' என்று சொல்லிக் கொண்டு மயூரி பிள்ளையார் சிலையோடு வெளியேற அந்த அரசமர் தனித்துப்போய் நின்றது.

அவர்கள் வீதிக்கு வந்தபோது சுற்றுலாவண்டி ஒன்று இராணுவ முகாம் பக்கத்திலிருந்து வந்து அந்த அரசமரத்தடியில் நின்றது. அந்த பஸ் வண்டியில் வந்து இறங்கிய படையினரைத் தொடர்ந்து புத்த பிக்குமாரும் 'புத்தம் சரணம் கச்சாமி' என்று ஓதிக்கொண்டே இறங்கினார்கள். தலைமைப் பிக்குவின் கையில் புத்தர் சிலையொன்றிருந்தது. அரசமரத்தடியில் அந்தச் சிலையை வைத்து வணங்கிவிட்டு 'இது எங்க இடம், புரியுதா? என்று வீதியில் நின்று வேடிக்கை பார்த்தவர்களை மிரட்டிவிட்டு அவர்கள் அந்த சுற்றுலா வண்டியில் ஏறிச் செல்ல, அந்த மிரட்டலில் பயந்துபோன எல்லோரும் மௌனமாய்க் கலைந்து போயினர்.

'புத்தரைக் கண்டால் பக்தி வருவதற்குப் பதிலாகப் பயமல்லவா வருகுது' என்று பறுவதம் பாட்டி தனக்குள் சொல்லிக்கொண்டே நடந்தாள்.

'இந்த அந்நியர்கள், எவ்வளவு காலத்திற்கோ?' என்று வாய்க்குள் முணுமுணுத்த மயூரி, பிள்ளையார் சிலையை அணைத்தபடி கிணற்றடியை நோக்கி நொண்டி நொண்டி நடந்தாள்.

நன்றே செய், அதை இன்றே செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் வந்த தமிழ் இலக்கியங்களில் ஓசோன்!

தற்கால அறிவியில் அறிஞர்களால் புவிக்கு மேலே இருக்கும் வான்வளி 6 பகுதிகளாக்கப்பட்டுள்ளது. புவியில் இருந்து ஒன்றன் மேல் ஒன்றாக ட்ரோபோஸ்பியர் (troposphere), ஸ்ட்ரோட்ஸ்பியர் (Stratosphere) மீஸோஸ்பியர் (mesosphere) தெர்மாஸ்பியர் (Theremosphere) எக்ஸோஸ்பியர் (exopshere) நத்திங்கனஸ் (nothingness) என அவை அமைந்துள்ளன. இவற்றுள் புவிக்கு மேலே முதலில் அமைந்திருப்பது ட்ரோபோஸ்பியர்.இது வான்வெளியின் மொத்த கன அளவில் பதினேழில் ஒரு பங்குதான். ஆனால், வான்வெளியில் உள்ள மொத்தக் காற்றின் அளவில் ஐந்தில் நான்கு பகுதி இங்கு தான் இரக்கிறது.


இன்றைக்கு ஏறத்தாழ 2,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்கள் வான்வெளியை ஐந்து கூறுகளாகப் பிரித்துக் கூறியிருப்பதை அறியும்போது வியப்பும் மகிழ்வும், பெருமிதமும் ஒருங்கே உண்டாகின்றன.

"இருமுந்நீர்க் குட்டமும் வியன் ஞாலத்து அகலமும் வளிவழங்கு திசையும் வறிதுநிலை இயஆகாயமும்". (புநறா-20) என்னும் வரிகளில் புவிக்கு மேல் உள்ள மூன்று பகுதிகள் கூறப்பட்டுள்ளன.

"செஞ் ஞாயிற்றுச் செலவும் அஞ் ஞாயிற்றுப் பரிப்பும், சூழ்ந்த மண்டிலமும் வளிதரு திசையும் வறிதுநிலை இயஆகாயமும்". (புறநா-30) என்னும் வரிகளால் புவிக்கு மேல் ஐந்து பகுதிகள் கூறப்பட்டுள்ளன.

"மயங்கிருங் கருவியவிசும்பு முகனாக இயங்கிய இருசுடர்கண்ணெனப் பெயரிய வளியிடை வழங்கா வழக்கறு நீத்தம்". (புறநா-365)

என்னும் வரிகளில் 2 பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் "திசை" என்னும் பகுதியில் காற்று இருக்கும். "ஆகாயம்", "நீத்தம்" என்னும் பகுதிகளில் எதுவுமிருக்காது எனவும் கூறப்பட்டுள்ளது. நீத்தம் என்பது இன்றைய அறிவியலார் கூறும் "வெறுமை" (நத்தினங்ஸ்) என்னும் பகுதி புவிக்கு மேல் இருக்கின்ற 2ஆவது பகுதியான "ஸ்ட்ரோட்ஸ்பியர்" என்னும் பகுதியில்தான் "ஓசோன்" எனப்படும் காற்றுப்படலம் அமைந்துள்ளது.




இப்படலம் கதிரவனிடம் இருந்து வரும் கடும் வெப்பத்தை, தான் தாங்கிக்கொண்டு புவியில் உள்ள உயிர்கள் துன்பம் உறாமல் காத்து வருகின்றது. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஓசோன் படலத்தைப் பற்றி 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் குறிப்பிட்டிருப்பது வியப்பை அளிக்கிறது அல்லவா?

"நிலமிசை வாழ்வார் அலமரல் தீர்தெறுக
திர் வெம்மை கனலி தாங்கி காலுணவாக
சுடரொடு கொட்கும் அவிர்சடை முனிவரும்
மருள" (புற – 43)

என்னும் பாடல் வரிகளின் கருத்து "புவியில் வாழும் மக்களின் துன்பம் தீர கதிரவனின் வெப்பம் நிற்க கனலைத் தாங்கிக்கொண்டு கதிரவனோடு சேர்ந்து சுழல்கின்ற முனிவர்கள் என்பதாகும். மேலும் முருகக் கடவுளின் ஒருகை "விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது" என்று திருமுருகாற்றுப்படை (107) இலும் " சுடரொடு திரிதரும் முனிவரும், அமரரும் இடர்கெட அருளி நின் இணையடி தொழுதோம்" என சிலப்பதிகாரத்திலும் (வேட்டுவ வரி 18) இக் கருத்து கூறப்பபட்டுள்ளது. முனிவர்கள் என்று கூறப்பட்டதாலேயே, மற்ற மதத்தினரும் பகுத்தறிவு வாதிகளும் இது அறிவியல் கருத்தன்று, கற்பகமரம், காமதேனு போன்ற கற்பனைகளுள் ஒன்றுதான் என்று சொல்லக்கூடும்.

முனிவர்கள் என்றாலும் சரி, அல்லது பிறவற்றை சுட்டினாலும் சரி, அது ஒரு பொருட்டன்று, கதிரவனின் வெப்பத்தைத் தாங்கிக்கொள்ளும் ஒரு பக்தியைத் தைப் பற்றி தமிழர்கள் (சங்கப் புலவர்கள்) சிந்தித்திருக்கிறார்கள் என்னும் செய்தி நாம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே கூறிவிட்டோம் என்று நினைக்கும்போது இந்த செந்தமிழ் நாட்டில் பிறந்தரை எண்ணி நாம் பெருமைகொள்ள வேண்டும்! அப்படிப்பட்ட நம் தமிழ் மொழியை உலகெங்கும் பரவ வழிவகை செய்ய ஒவ்வொரு தமிழனும் உறுதி ஏற்கவேண்டும்.

♦ ♦ ♦ ♦ ♦ ♦

# ஈர நிலங்களின் முக்கியத்துவம்
# Importance of the Wet lands



**திருமதி. சுபாஜினி உதயராசா,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்.

### 1.0. அறிமுகம் :

புவி மேற்பரப்பில் பல்வேறுபட்ட இயற்கைச் சூழற் தொகுதிகள் காணப்படுகின்றன. அவற்றினை நாம் நீர்சார் சூழற்தொகுதிகள் எனவும், நிலம்சார் சூழற்தொகுதிகள் எனவும் இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். நிலம்சார் சூழற்தொகுதி எனும் போது காடுக்ள, புல்நிலங்கள், வயல்வெளிகள், பூந்தோட்டங்கள், பாலை வனங்கள் என்பனவற்றைக் கூறலாம். நீர்சார் சூழற்தொகுதி எனும் போது ஆறுகள், குளங்கள், சமுத்திரங்கள், ஏரிகள், கடல்கள், ஈரநிலங்கள், பொங்குமுகங்கள் என்பன உள்ளடக்கப்படுகின்றன. அந்த வகையில் நீர்ச் சூழற் தொகுதியில் உள்வாங்கப்படும் ஒரு அம்சமாக ஈரநிலங்கள் அமைகின்றன. இத் தொகுதிகள் புவி மேற்பரப்பில் பல்வேறுபட்ட அங்கிகளுக்கு ஆதாரமாக விளங்குவதோடு இயற்கைச் சமநிலையைப் பேணும் ஒரு களமாகவும் தொழிற்படுகின்றது. இவ்வாறான ஈர நிலங்கள் அதன் வகைகள், அதன் பரம்பல், அவற்றின் முக்கியத்துவம், சூழலில் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றிலிருந்து ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகள் போன்ற விடயங்களை இக்கட்டுரை ஆராய்கின்றது.

### 1.1. ஈர நிலங்கள் என்றால் என்ன?

நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நீரால் மூடப்பட்டிருக்கும் இடங்களை ஈர நிலங்கள் எனக் கூறலாம். ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்கான ஓர் சர்வதேச ஒப்பந்தான ரம்சார் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையின்படி (Ramsar Convention) ஈரநிலம் என்பது பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. "சதுப்பு, தாழ்வு நிலம் அல்லது முற்றா நிலக்கரி நிலமாயினும், அலையற்ற சமயங்களில் ஆறு மீற்றருக்கு மேற்படாத ஆழங்கொண்ட இயற்கையான அல்லது செயற்கை யான, நிலையான அல்லது பாய்கின்ற நன்னீர், உவர்நீர் அல்லது கடல் நீர் உட்பட்ட உப்பு நீர்ப்பகுதிகளை அடக்கும்". ஈர நிலங்களாகக் கருதப்படவேண்டிய பரந்துபட்ட மண்ணியல் தொகுதிகளை உள்ளடக்கக் கூடிய விதத்தில் வேண்டுமென்றே இவ்வரையறை விரிவான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் ஈர நிலங்கள் தொடர்பான அமெரிக்க வரையறை தாவரங்களோடு கூடிய சதுப்பு நிலங்களை மட்டும் உள்ளடக்கக்கூடியதாக மிக அடக்கமாக உள்ளது.

### 1.2 ஈர நிலங்களின் வகைகள்

1. ஆழங்குறைந்த குடாக்களும், நீரிணைகளும். (உ-ம்) : வெலிகம் குடா
2. பொங்குமுகங்கள். குறிப்பாக தடுத்துக் கட்டப்பட்ட பொங்குமுகங்கள். உ-ம் : நீர்கொழும்பு கடலேரி.
3. கரையோரங்களுக்கு அப்பால் இருக்கும் சிறிய தீவுகள். உ-ம் : புறாத்தீவு.
4. பாறைகள் நிறைந்த கடற்கரைகள். உ-ம் : தங்காலை, பேருவளை.
5. கடற்ரைகள். உ-ம் இலங்கையின் கடற்கரை ஓரங்களை அண்டிக் காணப்படும் மணப்பாற்கான கடற்கரைகள்.
6. இடை அலைப்பிரதேசச் சேற்றுத் தட்டை நிலங்கள். உ-ம் : அலை குறைந்த சமயங்களில் வெளியே காணப்படும் பொங்கு முகங்கள், கடலேரிகள் மற்றும் ஆற்று முகங்களோடு தொடர்பானவை.
7. நீர்த்தாழைச் சதுப்பு நிலங்கள். உ-ம் : பொங்கு முகங்கள், கடலேரிகள் மற்றும் ஆற்று முகங்களை அண்டிக் காணப்படுபவை.
8. கரையோர உவர்நிர்க் கடலேரிகள். உ-ம் : முந்தல் கடலேரி.
9. உப்பளங்கள் (செயற்கையானவை) உ-ம் : ஹம்பாந்தோட்டை.
10. இறால் வளர்ப்புக் குளங்கள் (செயற்கையானவை). உ-ம் : வடமேல் மாகாணத்தில் காணப்படும் இறால் வளர்ப்புக் குளங்கள்.
11. நதிகள், ஆறுகள் – மெதுவாக ஓடுபவை. உ-ம் : கரையோரச் சமவெளியிலுள்ள நதிகளும், ஆறுகளும்.
12. நதிகள், ஆறுகள் – வேகமாக ஓடுபவை.
13. ஆறுகளை அண்டிய சதுப்பு நிலங்கள்.
14. நன்னீர் வாவிகளும் அவற்றை அண்டியுள்ள சதுப்பு நிலங்களும். உ-ம் : பராக்கிரம சமுத்திரம்.
15. நன்னீர்க் குளங்களும் அவற்றை அண்டிய சதுப்பு நிலங்களும். உ-ம் : மகாவேவ
16. உள்நாட்டு வடிகால் அமைப்புக்கள்.
17. நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள் (செயற்கை யானவை) உ-ம் : விக்டோரியா அணைக்கட்டும் நீர்த்தேக்கமும்.
18. காலத்துக்குக் காலம் நீர் பெருக்கெடுக்கும் புற்தரைகள். உ-ம் : மகாவலி ஆற்று வெள்ளப் பெருக்குச் சமவெளியில் காணப்படுபவை.
19. நெல் வயல்கள் (செயற்கையானவை)
20. வெள்ளப்பெருக்குடன் கூடிய பயிர்ச்செய்கை நிலங்கள்.
21. சதுப்புக் காடுகள்
22. முற்றா நிலக்கரிச் சதுப்புக்கள். உ-ம் : முத்துராஜ வெல சதுப்பு.

*(தொடரும்)*

எதனையும் செய்யாமல் முடியாது என்று எண்ணாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழியும் பண்பாடும் 11

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தமிழர் வாழ்வியலைத் தமிழ் மொழி சிறப்பாகப் பதிவுசெய்துள்ளது. பண்டைத் தமிழர் வாழ்வியல் இயற்கையோடு பெரிதும் இயைபுபட்டிருந்தது. பருவகால மாற்றங்கள் மிகத் துல்லியமாகக் கணிக்கப்பட்டிருந்தன. அவை வாழ்வியல் நடைமுறைகளோடு இணைக்கப் பட்டிருந்தன. காலக்கணிப்பு நிலையில் வாழ்வியல் செம்மையுற்றிருந்தது. ஆண்டின் தொடக்கம் முதல் நிறைவு வரை பல நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டன. அந்த வகையில் தைமாதம் தமிழரின் காலக்கணிப்பில் தொடக்க மாதமாகக் கருதப்பட்டது.

இக்கருத்து நிலைக்குச் சான்றாகத் 'தைப் பொங்கல்' என்ற தமிழச்சொல் இன்றுவரை வழக்கி லுள்ளது. ஆங்கிலப் புத்தாண்டு நடைமுறை தமிழர் வாழ்வியலில் இணைவதற்கு முன்னர் நமது முன்னோர் தைமாத முதல் நாளையே புதிய ஆண்டின் தொடக்க மாகக் கொண்டிருந்தனர். அன்றைய நாள் புதிய நடைமுறைகளைத் தொடங்கும் நாளாக வரையறை செய்யப்பட்டிருந்தது. இப்புதிய நாளை வரவேற்பதற்கு அதற்கு முதல்நாள் பழையனவற்றைக் கழித்துவிடும் நடைமுறை செயற்படுத்தப்பட்டது. வீட்டையும் சுற்றுப் புறங்களையும் தூய்மை செய்து புதிய மட்கலங்கள், ஆடைகள், கொள்வனவு செய்யப்பட்டன.

தை முதல்நாள் காலையிலே நீர்நிலையிலே நீராடிப் புதிய ஆடை அணிந்து புதுப் பானையில் புதிய வருவாயாகப் பெற்ற பச்சையரிசியிலே பொங்கல் செய்யும் நடைமுறை யிருந்தது. பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே பதிவுசெய்யப்பட்டுள்ள தைநீராடல், புதுநீர், தையூண் இருக்கை போன்ற சொற்றொடர்கள் இதற்குச் சான்றாக உள்ளன. அகநானூற்றுப் பாடல் ஒன்று பொங்கல் செய்து எல்லோரும் பகுத்துண்ணும் வாழ்வியலைப் பதிவுசெய்துள்ளது.


தமிழ் மொழியிலே ஆண்டுக்கணிப்பை முதன் முதலில் பாடலில் பதிவு செய்த பெருமை ஆண்டாளையே சாரும். அவள் பாடிய திருப்பாவை 30 பாடல்களிலும் 'மார்கழி நீராடும்' வழிபாட்டு நடைமுறை விளக்கப் பட்டுள்ளது. நாச்சியார் திருமொழியில் தைமாத வாழ்வியல் நடைமுறை விளக்கப்பட்டுள்ளது. ஆண்டின் நிறைவு மாதமான மார்கழி மாதம், புத்தாண்டு சிறந்த ஆண்டாக அமைய வேண்டுமென வழிபாடு செய்யும் மாதமாகக் கருதப்பட்டுள்ளது. சிறப்பாக இளந்தலை முறையினர் இவ்வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்ற வெண்டுமென ஆண்டாள் எண்ணினாள். அதிலும் குறிப்பாகப் பெண்கள் இந்த வழிபாட்டுப் பயிற்சியைப் பெற வேண்டும் என எண்ணித் தானே முன்னின்று அதை வழிநடத்தினாள். எனவே தமிழர் வாழ்வியலில் காலத்தைக் கணித்து வாழ்வியல் நடைமுறைகளைச் செய்யும் ஒரு புதிய மரபைத் தொடக்கிவைத்த முதற் பெண்ணாக ஆண்டாள் சிறப்புப் பெற்றுள்ளாள். அவள் அறிமுகம்செய்த காலக்கணிப்பு முற்றிலும் இயற்கையை அநுசரித்துச் செய்யப்பட்டது.

மார்கழி மாதம் முழுவதும் வழிபாடு செய்து அடுத்த ஆண்டின் முதல் மாதமான தையின் பிறப்பை மகிழ்ச்சியோடு வரவேற்கும் வாழ்வியல் ஜப்பானிய நாட்டிலும் நடைமுறையிலுள்ளது. அரிசிப் பண்பாடு இந்த நடைமுறையின் அடிப்படையாக அமைந்துள்ள மையால் அதனோடு தொடர்புற்ற பட்டிப்பொங்கலும் வாழ்வியலோடு இணைந்துகொண்டது. அத்துடன் உறவினரையும் நண்பர்களையும் புத்தாண்டில் மகிழ்வுடன் வரவேற்கும் காணும் பொங்கலும் உருவாகிற்று. ஆண்டுப் பிறப்பை மகிழ்வுடன் கொண்டாட விளையாட்டு, ஆடல், பாடல், போட்டிகள் எனப் பல விடயங்களும் பின்னர் சேர்ந்துகொண்டன. தமிழரது ஆண்டுத் தொடக்கமான 'தைப்பொங்கல்' இன்று தமிழர் வாழுமிடமெல்லாம் மகிழ்வோடு கொண்டாடப்படுகின்றது. 'தைப்பொங்கல்' என்ற தமிழ்ச்சொல் தமிழர் வாழ்வியலின் செழுமையை இன்று உலகறியவைத்துள்ளது.

எனவே தமிழர் பண்பாடு பற்றிப் பிறரறிவதற்குத் தைப்பொங்கல் நடைமுறைகள் பெரிதும் உதவும். 'பொங்கல்' என்ற சொல் மேற்கிளம்பல் என்ற பொருளைத் தருவது. தைப்பொங்கல் நாளன்று பானையிலே பால் பொங்கிவருகின்ற காட்சியைக் காணும்போது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி எழும். அதைக்கண்டு நம் முன்னோர் "பொங்கலோ பொங்கல்" என்று ஆரவாரமாகக் கூறி மகிழச்சியை வெளிப்படுத்தினர். பட்டாஸ் வெடித்து ஒலியை எழுப்பினர். எனவே தைப் பொங்கல் ஒரு மகிழ்ச்சி தரும் நன்னாளாகத் தமிழர் மரபுரிமையான செயற்பாடுகளைப் பேணும் நாளாக அமைந்துள்ளது.

கனடா நாட்டில் தைமாதம் தமிழர் மரபுரிமை பேணும் மாதமாகப் பிரகடனம் செய்யப்பட் டுள்ளது. இதற்குத் தைப்பொங்கல் நடைமுறைகளே முக்கிய காரணமாக அமைந்தன எனலாம். தமிழ்மக்களுடைய அனைத்துப் பண்பாட்டுக் கூறுகளையும் தைத்திருநாள் நடைமுறைகள் உளளடக்கி நிற்கின்றன. உணவு, உடை, உறையுள், மொழி, வழிபாடு, விருந்தோம்பல், பொழுது போக்கு என அனைத்து நிலைகளிலும் தமிழரின் தனித்துவமான மரபுரிமைகளைப் பேணுவதற்கு தைப்பொங்கல் வழிகாட்டிநிற்கின்றது. தமிழ் மொழியிலே இன்றுவரையும் வழங்கி வரும் "தைபிறந்தால் வழி பிறக்கும்" என்ற முதுமொழி புத்தாண்டின் வாழ்த்துச் செய்தியாக உலக மக்கள் அனைவரையும் ஒன்றி ணைக்கும் சங்கிலிப் பாலமாகத் தொடர்கிறது.

## நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி சாதனை மாணவிகளான சகோதரிகளின் மனித நேயம்





**SLAB** ஒத்தியல்பு சபை அகில இலங்கை ரீதியாக நடத்திய கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்ற நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி மாணவி குரும்பசிட்டி சிவாணியா ரவிநந்தாவிற்கு தாஜ் சமுத்திரா ஹொட்டேலில் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி அவர்கள் சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம்.இவர் தனக்கு அன்பளிப்பாகக் கிடைத்த பணப் பரிசை தனது சொந்தக் கிராமத்தில் மீளெழுச்சி கண்டுள்ள குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகாவித்தியாலய மாணவர்களின் கற்றற் செயற்பாட்டுக்கு உதவும் முகமாக யாழ் வெற்றிமணியிடம் கையளித்துள்ளார். இவரது இவ் உதவி ஏழை எளிய மாணவர்களின் கற்றற் செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகின்றது.

"நீரைச் சேமிப்பது எனது அபிலாஷை" எனும் கட்டுரைப் போட்டியில் அகில ரீதியில் பங்குபற்றி வெற்றி பெற்று அதன் மூலம் கிடைத்த பணப் பரிசினை கிறகேட் இல.1 தமிழ் மகா வித்தியாலய குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்தியமைக்கான கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி மாணவி குரும்பசிட்டி பவதாரணி ரவிநந்தாவிற்கு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக்க சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

**இவர்களின் மனித நேயம் மிக்க இச் செயற்பாடுகளை வெற்றிமணி பாராட்டுவதுடன் வாழ்த்தி மகிழ்கின்றது.**

## மணி விழா நாயகர்களை வெற்றிமணி வாழ்த்துகின்றது



08.02.2013 இல் மணிவிழாக் காணும் தீவக கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஐ. புவனேந்திரன் அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென யாழ் வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது.



18-01-2013 இல் மணிவிழாக் காணும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் உப அதிபராக விளங்கிய திரு. மு. வேலாயுதபிள்ளை அவர்களை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது.

**ஆயிரம் எதிரிகளைவிட ஒரு போலி நண்பனால் அதிகம் தீமை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிஞ்சுக் கருத்துக்களுக்கு இடமளியுங்கள்!



**பவதாரணி ரவீந்தா**
*தரம் – 11*
*கம் /கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி, நாவலப்பிட்டி.*

"ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"

என்று அன்று பாடினார் பாரதியார். யாருக்காக இதைப் பாடினார்? துள்ளித் திரியும் மான்குட்டி போல, மலர்களிலே தேன் குடிக்கும் வண்ணத்துப்பூச்சியைப் போல இனிய கானம் பாடும் குயில் போல, சுறுசுறுப்பும் துடுப்பும் கொண்ட சின்னச்சின்ன பல ஆசைகளைக் கொண்ட பிஞ்சுகள் எமக்காகப் பாடினார்.

பிஞ்சுகள் எமக்கும் பல ஆசைகள் உண்டு. எங்களது ஆசைகள் கோடிக்கணக்கானவை. ஆனாலும் சிறியவை. வீட்டில் செல்லப்பிராணி வளர்க்க ஆசை, சேற்றில் கேக் செய்ய, சொக்கலேற் சாப்பிட, சிரித்து மகிழ, மண்ணில் சோறு சமைக்க, பொம்மையைக் குளிப்பாட்ட, விம்மி விம்மி அழ, மணலில் வீடு கட்ட, கடற்கரை மணலில் படிக்க என்று கூறிக்கொண்டே போகலாம். எம்மைச் சுற்றி உள்ளவர்கள் "அதைச் செய்யாதே, தொடாதே, போகாதே, ஓடாதே, சத்தம் போடாதே" போன்ற மந்திரச் சொற்களால் எம்மைக் கட்டிவிடுகின்றனர். தொட்டறிந்து, சுவைத்து, அனுபவம் பெறவிரும்பும் பிஞ்சுகள் எம்மைத் தடுக்கின்றனர். எமது பிஞ்சுக் கருத்துக்களை நிராகரிக்கின்றனர்.

எமது பெற்றோருக்கு குறும்பு காட்டி, நமது குறும்புக்கு அவர்களை சிரிக்க வைக்கவேண்டும் என்று எண்ணி நாம் ஏதாவது குறும்பு செய்துவிட்டால் நமக்கு மிஞ்சுவது ஏச்சும் பேச்சும் மட்டுமே.

என்னைப் பெற்று வளர்த்த எனது பெற்றோர்கள் எனக்கு நன்மையைத் தான் செய்வார்கள். ஆனால் எனது விருப்பத்திற்கும் கருத்திற்கும் இடமளிக்கவேண்டும் என்பதை மறுக்கிறார்கள். உ–மாக – அன்று ஒருநாள் எனது பிறந்த தினத்திற்கு புதிய ஆடை வாங்கலாம் என்று கடைக்கு அழைத்துச் சென்ற எனது தாய் பல மிக மிக அழகான ஆடைகளை வாங்கித் தந்தார். ஆனால் ஒரு ஆடை கூட எனக்குப் பிடிக்கவில்லை. நான் எனது விளையாட்டுப் பொம்மைக்கு அலங்கரித்து மகிழ்ச்சி



யடைவதைப் போல எனது அம்மா தனது பிள்ளையான என்னையும் அலங்கரித்துப் பார்ப்பதில் தவறேதுமில்லை. எனக்கு அது பிடித்திருக்கிறதா? இல்லையா என்று கேட்காமல் அவர்களது விருப்பப்படியே நானும் இயங்கவேண்டும் என்று எண்ணுகின்றனர்.

எனது எதிர்கால இலட்சியத்தைக்கூட தாமே நிர்ணயிக்க விரும்புகின்றனர். நமது பெற்றோர்கள் தமது வாழ்வில் தாம் இலக்குவைத்த இலட்சியங்களை எம்மீது திணிக்கின்றனர். பிஞ்சுகள் எமது கருத்துக்களை செவிமடுக்காதுள்ளனர். அதுமட்டுமன்றி நாம் விரும்பும் துறையில் நமக்குப் பயிற்சிகள் வழங்குவதைத் தவிர்த்து அவரைப் போல் வரவேண்டும் இவரைப் போல் வரவேண்டும் என்று நாம் ஈடுபாடு காட்டாத துறையில் பயிற்சியைத் தருகின்றனர்.

நானொரு வங்கி முகாமையாளராக வரவிரும்புவதை அறிந்திருந்தும் நாம் ஒரு வைத்தியராகவே வரவேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றனர் நம் பெற்றோர்கள்.



'வேண்டாம்.... வேண்டுடாம்.... என்று கூறுமளிற்கு பல பல ஆடம்பரப் பொருட்களை வாங்கித் தந்து எம்மைக் களிப்பில் ஆழ்த்த முயலும் பெற்றோர்கள் எமது உண்மையான சிறு சிறு இன்பங்களை தவிர்க்கின்றனர்.

எமது பருவம் மிகவும் அற்புதமானது. இதனை வார்த்தைகளுள்அடக்க இயலாது. எமது உலகம் என்றும் குதூகலமானது. அனைவரையும் ஆனந்தத்தில் ஆழத்தக் கூடியது. இவ்வாறான எமது அழகிய உலகத்தை நாம் பாடசாலைகளிலே இழக்கின்றோம். சிறகிழந்த பறவை போல வாயை மூடி புத்தகத்தை மட்டும் பார்த்து படிக்க வேண்டிய நிலை. எம்மைப் பொறுத்தவரையில் கருத் துக்களைப் பரிமாறி சுதந்திரமாகக் கற்பதே உண்மையான இன்பமாகவும் கல்வியாகவும் விளங்குகின்றது.

சிறுவர்கள் எமக்குப் பல விருப்பு வெறுப்புக்கள் கருத்துக்கள் உண்டு. சிறுவர்களாகிய எமக்கு நாமே முடிவெடுக்கும் பருவம் வரவில்லை. ஆகையால் எங்களை நன்முறையில் வழிப்படுத்தும் பொறுப்பு பெற்றோர்களாகிய உங்கள் கைகளிலேயே உள்ளது. அதற்காக எங்கள் கருத்துக்களை முழுமையாகத் தவிர்த்து உங்கள் விருப்புக்களை எம்மீது திணிக்கின்றீர்கள். எமது விருப்பு வெறுப்புக்களை அறிந்து எமது கருத்துக்களுக்கும் இடமளியுங்கள்.

# உறவு



**வா. விதுஷா**
*யா/ மகாஜனக் கல்லூரி,*

மகத்தான பிறவியாம்
மானிடப் பிறவிதனை
வாழ்ந்திடப் பிறந்து விட்டோம்
வாழ்ந்துதான் ஆக வேண்டும்

உறவு எனும் சொல்லிலே
உறங்கியிருக்கும் பல நிஜங்கள்
அறிந்தவர் யாருமில்லை
அறிந்திட வாய்ப்புமில்லை

வாழ்க்கை என்ற சோலையது
வளமுடனே செழித்திருக்க
உரமாக இலங்கிடும்
உறவுகள் பல உண்டு.

கருவறையில் உதயமாகிக்
கல்லறையில் உறங்கும் வரை
தொடர்ந்திடும் பயணமதில் – நம்மை
கடந்திடும் உறவு பல.
கருவிலே சிசுவாக
உருவாகும் நாள் தொடங்கி
அன்னை எனம் உறவு
அன்பாக வாய்த்திடுமே.

சுற்றும் பூமிதனில் கால்பதித்து
சற்று நேரத்திலே — எம்மோடு
உறவாடி மகிழ்ந்திடவே
உறவுகள் பல காத்திருக்கும்.

தந்தை எனும் உறவும்
சிந்தையை மகிழ்விக்க
காலச் சக்கரம் அது
சாலவே சுழன்றிடுமே.

உடன் பிறந்த சொந்தமான
உடன்பிறப்பு எனும் உறவும்
வாழ்க்கைதனில் கிடைத்திட்டால்
வாழ்ந்திடவே தயக்கமில்லை.

ஏணிப்படிகளெனும் ஆண்டுகளில்
ஏறிச் செய்கையிலே
அறிவின் ஆலயமாம் குருவின்
அறிமுகமும் கிடைத்திடுமே.

ஆசான் எனும் உறவும்
அழகாக வாய்த்திட்டால்
ஆயகலை அறுபத்து நான்கும்
கைவந்து சேர்ந்திடுமே.

நட்பு வானிலே — சுதந்திரமாய்
நட்புப் பறவைகளாய்
சிறகடித்துப் பறந்து
உறவாடலும் ஆனந்தமே.

துள்ளித் திரிந்திடும் காலமாம்
பள்ளிப் பருவமதில்
அறியாத முகங்களுடன்
அறிமுகங்கள் கிடைத்திடுமே.

மனம் என்னும் சோலையிலே
மலர்ந்து விடும் புதுமலராம்
காதலின் அறிமுகமே
கடைசிவரை நிலைத்திருக்கும்.

ஈருயிர் சேர்ந்து
ஒருயிராக இணைந்திடும்
உறவாம் காதலில் – பல
அறியாத உணர்வுகள் ஆழ்ந்திருக்கும்.

கல்வி கற்கும் பருவமதை
நல்விதமாய்க் கடந்ததுமே
அன்பான சமூகமதில் – நம்மை
அழைத்து நிற்கும் பல உறவு.

காலத்தின் சக்கரம்
கச்சிதமாய் சுழல்கையிலே
திருமணம் எனும் உறவால் – வாழ்வில்
திருப்பங்கள் பல வருமே.

கணவன், மனைவி உறவும்
கச்சிதமாய் அமைந்துவிட்டால்
இனிவரும் காலமதில்
இன்ப ஒளி வீசிடுமே.

இல்லறத்தை இனிதாக
நல்லறமாய் நடத்தியதன் சான்றாக
அவதரிக்கும் குழந்தையது
அழகான புது உறவே.

இத்தனை உறவுகளும் – வாழ்வில்
மொத்தமாய் வாய்த்துவிட்டால்
எத்தனை இடர் வருமோ,
எத்தனையும் தாங்கிடலாம்.

எத்தனையோ உறவு இருந்தாலும்
அத்தனையும் அமைவதில்லை
அமைந்திடாத உறவுகளால் – மனதில்
அழிந்திடாத காயங்கள்.

அவசரமான இவ் உலகில்
அவசியமான பணம் தேடிச்
செல்லும் வழியினிலே — உறவு
செல்லாக் காசாகிப் போவது ஏனோ!

அறிவியலின் வருகையினால்
அறியப்பட்ட பல நிஜங்கள்
உறவு எனும் வார்த்தையினை
உறங்க வைத்தது ஏனோ!

அறிவின் மகத்துவத்தை
ஊரறியச் செய்தல் வேண்டும்
எட்டுத் திக்கிலும் பரப்பி
ஏட்டிலும் பாட்டாய் வகுத்திட வேண்டும்.

மனிதனின் மரத்துவிட்ட
மனங்களிலே உறவு எனும்
பூ மலர்ந்தால் – நாளை
பாலைவனமும் பசுஞ்சோலை.

**ஜேர்மனியிலுள்ள பிரபல வியாபார ஸ்தாபனத்தினர்**
**தாயகத்தில் மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகின்றார்கள்**

**S.K.Silks Paradise**



கல்யாண கூறைச் சேலைகள் பட்டுச் சேலைகள்,
பட்டு வேட்டிகள், பஞ்சாபி, சுடிதார்கள் இன்னும்....
டோட்மூண்ட் நகரில் மாபெரும் ராஜ முத்திரை
காக்கறாச்சோலி சீக்குயின்ஸ்
சேலைகள், அனார்க்கலி பஞ்சாமி
அனைத்தும் சிறப்பு விலையில்
T.P. 0231-9501648
Germany

**T.T.S Brothers** Asien Supermarkt
உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent
இலங்கை, இந்திய மளிகைப்பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்திற்கும் நாடுங்கள்.
மங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்கநகைகள் நவீன டிசைன்களில் அழகுறத் தருபவர்கள்
TEL: 0231-819288 Fax: 0231-833431
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

முயற்சி மூச்சு உள்ளவரை இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF ... LIBRARY
0 8 MAY 2013

# ANDRA ஆதரவில் கலை அரங்கம்










அன்பொளி கல்வி அகத்தில் கற்று 2012ஆம் ஆண்டு தேசிய புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய 562 மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களும், மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெயவீர சிங்கம் அவர்களும் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்தார்கள். இந் நிகழ்வில் அன்பொளியின் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அன்பொளி கல்வியக நிர்வாகத்தினரையும் பரீட்சையில் சித்தி எய்திய 562 மாணவர்களையும் வெற்றிமணி பாராட்டி மகிழ்கின்றது. வளரட்டும் அன்பொளியின் கல்விச் சேவை.

## பரதநாட்டிய அரங்கேற்றம்



ஜேர்மனி சலங்கையொலி நாட்டிய கலாமன்ற மாணவனான செல்வன் **நிரோஜன் திருநாவுக்கரசு** அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் அண்மையில் நடைபெற்றது. இவர் ஜேர்மனி சலங்கையொலி நாட்டிய கலாமன்ற அதிபர் திருமதி **சாவித்திரி இமானுவேல்** MA.(Dance) அவர்களின் மாணவன் ஆவார்.

## நிகழ்வின் நிழல்கள்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கலைநிகழ்வு ஒன்றில் தரம் 5D மாணவர்களாகிய இ. ஓவியா, பி. மானசி, பு. அக்ஷலா ஆகியோர் தோன்றும் காட்சியை படத்தில் காணலாம்.



யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் ஒன்றிற்கான கால்கோள் விழாவில் தரம் 1E மாணவர்களான செல்வன் சு. லதுர்ஷன் முருகனாகவும், செல்வன் வே. திலக்ஷன் மயிலாகவும் தோன்றும் காட்சி யினை படத்தில் காணலாம்.






**கலை உலகை அலங்கரிக்கிறது உள்ளத்தை அழகுபடுத்துகிறது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org